www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.02 திருவள்ளுவர் ஆண்டு 2052 | 14.07.2020 - 13.08.2020 | ISSN : 2195-6480





## பணமின்றியப் பிணமாக இலங்கை

FREE Magazine

## அரசியல் சதுரங்க ஆட்டம்



## தமிழர் தேசத்தை மீட்போம்

ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

INNENSTADT WEST

ortel MOBILE

# DORTMUND

# தமிழர் தெருவிழா 2021

மாபெரும் ஆடல் பாடல் கொண்டாட்டம்....

# Strassenfest der Tamilen

## 04. & 05. SEP 21

Dortmunder U

Park der Partnerstädte

Bundesstraße 54

Westentor

Rheinische Str.

**DORTMUNDER U - Park der Partnerstädte**

**Sa. 11:00 - 22:00 Uhr**

**So. 12:00 - 18:00 Uhr**

தமிழர் அரங்கம்

VMDO Der Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e. V.

HOUSE OF RESOURCES

Tamilischer Kultur Do TKD தமிழர் கலையகம் Bildung Begegnung Beratung

Stadtteil-Schule Dortmund e.V. Bildung - Beratung - Begegnung

comdu.it Deutschland

ஊடகஅனுசரணை

வெற்றிமணி

அகரம்

IBC தமிழ்

GTV

தமிழ் MTV

STS தமிழ் TV

Lankasri

ETR

0151 633 633 33 | 0162 803 1647 | 0157 7351 7849 | 0177 679 4261 | 0151 27 990 990

TREUE + BONUS 2)

ortel MOBILE



SMART WORLD

**20 countries**
**250 minutes**

250 minutes from
Germany to 20 countries

250 minutes from
Germany to Eu

Internet Flat Highspeed up to 8GB

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***

# OHNE PAUSE NACH HAUSE.




**Ortel. Wir sprechen Deine Sprache.**

Google play · Available on the App Store

**Aufladbar mit:** ortel MOBILE, O2, e-plus+

Ortel Mobile GmbH, E-Plus-Straße 1, 40472 Düsseldorf. Nutzungsvoraussetzung: Erwerb eines Starterpaket (UVP 9,95 €). Standardtarif: Innerdeutsche Gespräche: 9 Cent/Min., Gespräche ins Ausland ab 1 Cent/Minute. Gespräche jeweils zzgl. einmaliger Verbindungsgebühr von max. 15 Cent je Gespräch möglich (alle Preise unter www.ortelmobile.de). SMS 15 Cent. 49 Cent/MB. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Datengeschwindigkeiten innerhalb Deutschlands und in der EU von bis zu 21,6 MBit/s (Download) und 8,6 Mbit/s (Upload). Bei den angegebenen Geschwindigkeiten handelt es sich um die jeweils technisch mögliche Maximalgeschwindigkeit. Die tatsächlich erreichte Durchschnittsgeschwindigkeit kann davon abweichen. Taktung 100 KB Schritte. 1) World Flat (24,99€ pro 28 Tage Optionslaufzeit zubuchbar zum Standardtarif): Unbegrenzte Minuten aus Deutschland in die EU, sowie Gespräche aus Deutschland in alle Netze von Bangladesch, Brasilien, Chile, China, Hongkong, Indien, Indonesien, Japan, Kanada, Malaysia, Puerto Rico, Singapur, Südkorea, Thailand, USA sowie in die Festnetze von Kasachstan, Russland, Slowenien. Dazu eine Flatrate für Gespräche in alle deutschen Netze. Dies gilt auch für Telefonate innerhalb der EU und aus der EU nach Deutschland. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Außerhalb der Inklusivleistung gelten die üblichen Konditionen Ihres Tarifs. Die Verlängerung erfolgt bei ausreichendem Guthaben automatisch, wenn die Option nicht zum Ende der jeweiligen Laufzeit gekündigt wird. 2) Verlängerung 19,99 €/28 Tage.




AKARAM
அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 ஆடி 2021 - 13 ஆவணி 2021
சுவடி / ISSUE 9.02



**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் பணிவான வணக்கம்.**

'நாட்டுக்கு ஒரு மழை என்றால், நமக்கு இரண்டு மழை என நரி சொல்லுமாம்' இப்படி ஒரு பழமொழி நம் நாட்டில் உண்டு. அது போல உலகத்துக்கு ஒரு கொரோனா பல வடிவங்கள் என்றால், தமிழ் மக்களுக்கு குறிப்பாக ஈழத் தமிழ் மக்களுக்கு ஓராயிரம் கொரோனாக்கள் ஒவ்வொன்றும் தனி அவதாரமாகத் தாக்கி வருகின்றன. அவற்றுள் எம்முடன் பிறந்த கிருமிகளால் படும் தொற்று நோய் அவலம் சொல்லி மாளாது. 'தலைவலி போய் திருகுவலி வருவது போல'த் தொடர் தொற்று நோய் கொரோனா தொலைந்தாலும், தொலையாது துரோகிகளின் தொல்லை.

புலிகளையும், ஈழத் தமிழின அழிப்பையும் செய்தவர்கள் இப்பொழுது 12 வருடம் கழித்து எள்ளும், தண்ணியும் இறைத்துப் பிதுர்க்கடன் தீர்க்க வருகிறார்களாம். காரணம் சீன வெடி அந்த மாதிரிப் பீதியை எழுப்ப, அவர்கள் பேதி கண்டு அலைகிறார்கள். அன்று பயங்கரவாதி எனச் சொல்லி எம்மை அழித்தவர்கள் இன்று நாங்கள் இருக்க எதுக்குச் சீனா என எம்மை சீனாவிடம் இருந்து காக்க வருகிறார்களாம்.

இலங்கையில் சீன மாணவிகள் மிகத் தெளிவாக, அழகாக சிங்களம் பேசும் காணொளிகளை முகநூலில் காண்கிறோம். ஒரு இலட்சம் சீனர்கள் இலங்கையில் வேலை செய்கிறார்களாம். சீனா பெருந் தெருக்களைப் போட, இந்தியா ரயில் தண்டவாளம் போட்டது. சிங்களவன் எமது நாட்டைப் பறிக்க இவர்கள் இணைந்தே எங்கள் மீது குண்டுகளைப் போட்டு அழித்தவர்கள்.

இந்தியா துணைத் தூதரகம் திறந்து, காந்தி சிலையைக் காட்டி இந்தி மொழியை எமது யாழ்ப்பாண மக்களுக்குப் புகட்டியது. தேர்தலில்

யார் வெற்றி பெற வேண்டும்? என அரசியல் நடத்தியது. ஆனால், சீனா நாடெங்கும் பரந்து, இன்று வடக்கில் கடல் அட்டை வளர்க்கவும், காற்றாடி மின் நிலையங்கள் அமைக்கவும், கிளிநொச்சி பரந்தன் மன்னார் நெடுந்தீவு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை என எங்கும் நிறைந்து விட்டது.

இப்பதான் புலிகளை அழித்தது எத்தனை பெருந்தவறு எனத் திருட்டு முழியோடு அமெரிக்காவிடம் சேர்ந்து, இந்தியா தமிழருக்குத் தீர்வு தேடுவதாக பேசுகிறது. எங்கள் எட்டப்பர் கூட்டமும் ஒன்று சேர்ந்து, மீண்டும் 13வது திருத்தச் சட்டம் என்கிற குண்டுச் சட்டிக்குள் சவாரி விடத்துடிக்கிறார்கள்.

ஆனால், இந்தியாவில் தமிழ் நாட்டையே பல மாநிலங்களாக உடைத்து, அங்கும் தமிழரின் உரிமைக் குரலைச் சிதைக்கும் பணியிலும் இந்திய அரசு ஈடுபட்டு வருகிறது. நாங்கள் வயித்துக் குத்தை நம்பினாலும், அவனை நம்பமாட்டோம் என வாழ்ந்தவர்கள். ஆனால், எங்கள் எட்டப்பர் கூட்டணிக் கூட்டம் அவனை நம்பி, தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்து அழித்தார்கள். அதன் பின்னரும் நீதியோ, நியாயமோ, தீர்வோ கிடைக்காமல் இன்று வரை எமக்குத் துரோகம் செய்கிற அவர்களை எமக்காக அரசியல் பேச நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?

இப்பொழுது அமெரிக்கா ஐ.நா.சபையில் எமக்காக பேசப் போகிறது என்கிற செய்திகளோடு, பசில் ராஜபக்ஷவை அவசர அவசரமாக நிதி அமைச்சராக்கி, அவர் மூலம் ஆட்சி மாற்றம், ஆள் மாற்றம் 2015ல் நடத்தியது போன்ற ஒரு நாடகத்தை அரங்கேற்றி, எமது பிரச்சினைக்கான தீர்வை நீர்த்துப் போகச்செய்யும் சதி போலத் தெரிகிறது.

பசிலும், கோட்டபாயாவைப் போன்றே அமெரிக்கக் குடியுரிமை கொண்ட சிங்களப் பேரினவாத மகிந்த ராஜபக்ஷவின் உடன் பிறந்த சகோதர். அவரது பதவி ஏற்பை வெடி கொழுத்திக் கொண்டாடிய கூட்டம், யாழ்ப்பாணத்திலும் காணப்பட்ட அதிசயம் நிகழ்ந்திருக்கிறது.

எமது புலம் பெயர் ஈழத் தமிழர் அரசியல் செயற்பாட்டாளர்கள், எமக்குச் சர்வதேச அரசியல் அரங்கில் ஏற்படப் போகும் ஆபத்துகளை நன்கு ஆய்வு செய்து, தமது அரசியல் வியூகங்களை வகுத்துச் செயற்பட அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

**ஆசிரியர், அகரம் குழுமம்**




த. எதிர்மன்னசிங்கம்



## அமெரிக்கா
## இலங்கை
## இந்தியா
## சீனா

# அரசியல் சதுரங்க ஆட்டம்



### அமெரிக்கா

முன்னாள் அமெரிக்க அதிபர் ட்றம் ஆட்சியில் இலங்கை தொடர்பான அரசியல், இராணுவ வணிக நலன்கள் சார்ந்த அழுத்தங்களைப் பயன் படுத்தி, இலங்கையைச் சீனாவிடம் இருந்து எடுத்து விடும் மென் போக்கு காணப்பட்டது. அவருடைய முழுக் கவனமும் வட கொரியா, ஈரான் பக்கமாகவே காணப்பட்டது.

புதிய அதிபர் ஜோ பைடன் கவனம் இப்பொழுது இலங்கை நோக்கித் திரும்பி உள்ளதாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் இலங்கை அரசின்

தொடர்ச்சியான சீனாவின் ஆதிக்கத்தில் விழுந்து விட்ட நிலையும், எந்த வகையிலும் இந்தியா மற்றும் மேற்கு உலக நாடுகளின் பிடியிலிருந்து திமிறி விலகிச் செல்லும் போக்கால் ஏற்பட்ட மாற்றம் எனலாம்.

இந்த மாற்றம் அமெரிக்காவின் தலையீட்டைக் கட்டாயப் படுத்த இலங்கை அரசு ஐ.நா.மனித உரிமை ஆணைச்சபைத் தீர்மானங்களைப் பத்து வருடங்களுக்கும் மேலாகத் தன்னிச்சையாக மீறிக் கட்டாக் காலி மாடு போல நடப்பதை முக்கிய காரணியாகக் கருதலாம். சர்வதேச மனித உரிமை மீறல் போர்க் குற்ற மற்றும் நீதிக்குப் புறம்பான கைதுகள், சித்திரவதைகள் தொடர்பான சர்வதேச நீதிச் சபை ஆணையம் வைத்து வரும் குற்றச் சாட்டுகள் பற்றி இலங்கை அரசு உரிய விசாரணைகளும், பொறுப்புக் கூறலும் செய்யாமல், ஐ.நா. அமைப்பை கேலிக் கூத்தாக்குவதை உலகம் எப்படி கண்டு கொள்ளாமல் இருக்க முடியும்? என்கிற உறுத்தலான கேள்வி எல்லா நாடுகளையும் எதிர் கொள்ளும் நிலை வந்து விட்டது.

இவை எல்லாவற்றுக்கும் முடிவுகட்டும் விதமாக இந்தியாவின் பாதுகாப்பை சீனாவின் இலங்கை மீதான பெருகிவரும் தலையீடுகள், எழுப்பிவரும் கரிசனைகள், கவனங்கள், கண்டனங்கள் அமெரிக்க வெள்ளை மாளிகை வரை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கரை செல்ல வைத்து விட்டன.

இப்படியான நிலையில் அமெரிக்க மக்கள் சபை இலங்கைப் பிரச்சினை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றி, மேல் சபையான சௌற்றுக்கு ஒப்புதலுக்கு விட்டுள்ளது. இந்தத் தீர்மானம் இலங்கைத் தமிழர்களின் 2009 இன அழிப்புப் போருக்குப் பின்னர் 12 வருடங்களாகத் தீர்க்கப்படாத இலங்கைத் தமிழர்கள் படும் அவலங்களை முன்னிறுத்தி உள்ளமை, ஈழத் தமிழ் மக்களின் விடிவெள்ளியாக சில அரசியல் விமர்சகர்களால் பார்க்கப்படுகிறது. உண்மையில் இது விடியலின் ஒளிக் கீற்றா? இல்லையா? என்பதை அடுத்த மனித உரிமை ஆணைச் சபை எடுக்கும் முடிவுகளைப் பொறுத்தே அறியமுடியும்.

## இலங்கை

இலங்கையின் மத்திய வங்கி, சீன கம்மியுனிசக் கட்சியின் நூற்றாண்டு நினைவாக ஒரு நாணயத்தை வெளியிட்டுள்ள செய்தி பற்றி இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் மங்கள சமர வீர பல

> **2000 வருடங்களின் பின்னர் இழந்த இஸ்ரவேல் மீட்கப்பட முடியும் என்றால், வெறும் 200 ஆண்டுகள் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்ட எமது தாய் மண்ணை ஏன் எம்மால் மீளப் பெற முடியாது?**

கருத்துகளைச் சொல்லி உள்ளார். எமக்கு அவரது கருத்துகள், கண்டனங்கள் அல்ல பிரச்சினை.

அண்மைக் காலமாக இலங்கை அரசியலைப் பார்க்கும் பொழுது, சிங்கள மக்களே இலங்கை சீனாவின் காலனித்துவ அல்லது குடியேற்ற நாடாக மாறிவிட்டது எனச் சொல்லி வரும் நிலையில், இந்த சீனக் கம்மியுனிசக் கட்சியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை இலங்கை அரசின் மத்திய வங்கி வெளியிடுவது என்பது, இலங்கையின் ஆட்சியும், சீனக் கம்மியுனிசக் கட்சியின் கைகளில் விழுந்துவிட்டதையே உறுதி படக் காணமுடிகிறது.

அண்மைக் காலங்களாக அதிபர் கோட்டபாயாவின் முகத் தோற்றம் மிகப் பெரும் பீதியில் தவிப்பதாக வெளியாகும் ஒளிப் படங்கள் மூலம் தெரியவருகிறது. கொழும்பு துறைமுக நகரம் மிகப் பெரும் தலைவலியாக உள்நாட்டிலும், அயல் நாட்டிலும் வலுப் பெற்று வருவதை யாரும் மிக எளிதில் கண்டு கொள்ள முடியும்.

இந்த அமளி துமளியில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக் கான, தைத்த ஆடைகளின் இறக்குமதி வரிச் சலுகை விலக்களிப்பை நிறுத்தி விட்டால், இலங்கையில் பொருளாதாரம் அதல பாதாளத்தில் விழுந்து சிதைவது நிச்சயம். பொருளாதாரம் தான் இப்படி என்றால்? அரசியல் ரீதியில் சிங்கள, தமிழ் பேசும் இஸ்லாமிய, கிருத்துவ சைவர்களும் உட்பட்ட பொது மக்களின் வாழ்வாதாரம் முற்றிலும் சிதைக்கப்பட்ட அவல நிலை அப்பட்டமாகத் தெரிகிறது. அப்படியானநிலையில் நாட்டில் மக்கள் குழப்பம் எழுவதை யாராலும் தடுக்க முடியாது. இப்போது கொரோனா பெருந் தொற்று எல்லா மக்களையும் கட்டுக்குள் வைத்துள்ளது.

நாட்டின் ஆட்சி அதிகாராம் இலங்கை இராணுவ அதிகாரிகளின் கைகளில் உள்ளது. அதில் புதிதாக சீன இராணுவம் சேர்ந்திருப்பதாக ஆதாரமான புகைப் படப் பதிவுகள் பற்றிய செய்திகள் வெளியாகி உள்ளன. அப்படி ஒரு நிகழ்வை குறித்துப் பேசிய அமைச்சர் யோன்ஸ்ரன் பெனாண்டோ இந்த அரசு மிக மென்மையாக நடந்து கொள்கிறது. ஆனால், காகத்தைக் கொன்று அதன் சிறகைத் தொங்கவிடுவது போன்ற செயலைச் செய்து மக்களை அடக்க வேண்டும் என்றார்.

## இந்தியா

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சீனாவின் இலங்கை தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய இந்திய அரசின் கவலைகள், கரிசனங்கள், கண்டனங்களை அமெரிக்க வெள்ளை மாளிகையிலும் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிகிறது. இந்தியாவுக்குக் கொழும்புத் துறைமுக கிழக்கு முனை பெட்டக மையம் அதானிக்கு இல்லாமல் போய் விட்டதே என்கிற கோபம். இலங்கை அரசைக் கொடுக்க விடாமல் தடுத்த தொழிற்சங்கங்கள், புத்த பிக்குகளின் பின்னால் சர்வதேச அரசியல் இருக்கும் வாய்ப்புகளும் உள்ளன. அதன் விளைவே பசில் ராஜபக்ஷவின் அமெரிக்கப் பயணம் எனக் கூறப்படுகிறது.

அங்கே அவர் தானாகப் போனாரா? அல்லது அழைக்கப்பட்டுப் போனாரா? ஏன் அழைக்கப்பட்டார்? அங்கே அவருக்கு கிடைத்த பரிசு என்ன? அவர் கோட்டபாயாவுக்கு கொண்டு வந்த பரிசுப் பெட்டகத்தில் என்ன இருந்தது? என்கிற பல கேள்விகளுக்கான பதிலை அடுத்து நடைபெறும் அரசியல் நகர்வுகளை வைத்தே யாரும் அறிய முடியும்.

## சீனா

அமைச்சர் குறிப்பிட்ட அந்தக் கோர நிகழ்வு இதுதான்:- கி.மு.3ம் நூற்றாண்டில் வெட்டப் பட்டதாக நம்பப்படும் திசைமகரகம ஏரியைத் தூர் வாரச் சென்ற சீனத் தொழிலாளிகள், இராணுவச் சீருடை போன்ற உடைகளுடன் வெளியான ஒளிப் படங்களால் எழுந்த விமர்சனங்களைக் குறித்து அமைச்சர் தெரிவித்த காகமும் சிறகும் கதை. இந்தச் சர்ச்சை ஏற்பட்ட காரணம், ஏரியைத் தூர் வாரிய சீனக் கூட்டு நிறுவனம் அகழாய்வுத் திணைக் களத்தின் அனுமதியின்றிச் செயற்பட்டது என்பதே.

இந்த நிகழ்வு இலங்கையில் சீனா என்ன செய்கிறது? ஏன் செய்கிறது? என யாருக்கும் கேள்வி கேட்கும் அதிகாரம் இல்லை. எதையும் செய்வதற்கு எவரின்

அனுமதியோ, அங்கீகாரமோ தேவை இல்லை என்கிற உண்மை தெளிவாகிறது.

சீனா மட்டுமா அங்கே இப்படிச் செய்கிறது ? இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா எங்கே? என்ன செய்கிறார்கள்? எவருடைய அனுமதி பெற்றுச் செய்கிறார்கள்? என யாராலும் சொல்ல முடியுமா? வெள்ளை வான்களின் வரலாறு முடிந்து விடவில்லை என்கிற பயம் மக்களை இன்னும் விட்டுப் போகவில்லை.

அண்மையில் கொழும்பு மருதானையைச் சேர்ந்த சிங்கள ஊடகவாளரின் வீட்டில் திருடர் போல நுழைந்த சிலர், அவருடைய அறையைச் சோதனை இட்டுச் சென்றுள்ளனர் . அதுபற்றிய முறைப் பாட்டை மருதானை காவல் நிலையத்திலும் செய்துள்ளார்.

மற்றொரு நுகர்வோர் உரிமைச் செயற்பாட்டாளரான அசேல சம்பத் என்பவர் அவருடைய வீட்டில் இருந்து சாதாரண உடையணிந்த 20 பேரால் பலவந்தமாகக் கடத்தப்பட்டார். முன்னர் அவர் அமைச்சர் பந்துல குணவர்த்தனாவை விமர்சித்த காரணத்தால் கைது செய்யப் பட்டிருந்தார். அவரைக் கைது செய்வதற்கான பிடி வாரண்ட் எதுவும் காண்பிக்க வில்லை. இந்தக் கடத்தல் காட்சியை வீடியோ பதிவு செய்து, முகநூலில் அவரது மகள் போட்டதால் சி.ஐ.டி. பொலிசார் அவரை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, அவரது உயிர் பாதுகாக்கப் பட்டது என்று அலேசம்பத் 'யு.ரியுப்' காணொளியாகப் பதிவு செய்துள்ளார். யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான கைதுகள் நடைபெற்று வருகின்றன.

### ஆட்டம்

சர்வதேச அளவில் இலங்கை தொடர்பான ஆட்டம் செப்டெம்பர் மாத ஐ.நா.மனித உரிமை ஆணைய அமர்வில் எப்படி அமையவேண்டும்? என்பது தொடர்பாக உலகத் தமிழ்




மக்கள், தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை உரக்க ஒலிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. 2009 முதல் இன்றுவரை ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தலைமை, தொடர்ச்சியாக இலங்கை - இந்திய அரசுகளின் கைக் கூலிகளாகவே செயற்பட்டு வந்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பழி வாங்குவதாக நினைத்துக் காட்டிக் கொடுத்துத் தமிழின அழிப்புக்குத் துணைபோன தமிழரசுக் கட்சித் தலைமையிலான தமிழர் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக இயங்கும் தார்மீகத்தை என்றோ தொலைத்து விட்டது. ஆயினும், தமிழரசுக் கட்சியின் வெளிநாட்டுக் கிளைகள் இன்னமும் கண்மூடித்தனமாக ஆதரவு வழங்கும் அவலம் நீடிப்பதை அறிவார்ந்த மக்கள் யாரும் ஏற்க மாட்டார்கள். ஏற்பதும் பெரும் அவமானம்.

ஏதாவது பெரிய நாட்டின் ஆதரவுவேண்டும் என நினைத்து, காலில் போய் விழுவதால் பயனில்லை. உலக அரசியலில் இலங்கை பலத்த அடி வாங்கப் போவது நிச்சயம். அப்படியான தருணத்தில் நாம் போர்க்குற்ற மற்றும் இன அழிப்பு விசாரணையைச் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் போராடி, நீதி பெறுவது நிச்சயம் சாத்தியமாகும்.

**இந்தியா மீண்டும் தமிழ் மக்கள் மீது சவாரி செய்ய முனைப்புக் காட்டுவது தெரிகிறது. அதற்கு ஈழத் தமிழர் நாம் மீண்டும் பலியாகி விடக் கூடாது. இந்தியாவை நாம் நம்பமுடியாது, நம்பவும் கூடாது. அதன் தலைமையில் சர்வதேச அரசுகளின் மேற்பார்வையில் எமது தாயகம் மீளப் பெறவேண்டும்.**

**அதன் எல்லைகள் எப்படி 1830-ல் ஆங்கிலேய அரசு தமிழ் மக்களிடம் இருந்து பறித்ததோ, அதே எல்லைகளுடன் தரப்பட வேண்டும். இந்தக் கோரிக்கை எல்லாத் தமிழ் மக்களின் குரலாக ஒலிக்க வேண்டும்.**

**2000 வருடங்களின் பின்னர் இழந்த இஸ்ரவேல் மீட்கப்பட முடியும் என்றால், வெறும் 200 ஆண்டுகள் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்ட எமது தாய் மண்ணை ஏன் எம்மால் மீளப் பெற முடியாது? வேண்டுமானால் இந்தியாவின் பாதுகாப்பைக் கொண்ட தனித் தன்னாதிக்க நாடாக தனித் தமிழ் ஈழம் அமைவதை இந்தியா முன்வந்தால் நாம் மகிழ்வோடு ஏற்கலாம்.**




GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607



2021ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங்
நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி
நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

**சபேசன்**

# மேதகு

## ஓர் அலசல்




அண்மையில் வெளியான மேதகு என்கின்ற திரைப்படம் பல்வேறு வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுடைய ஆரம்பகால வாழ்க்கை வரலாறு பற்றியதாக இந்தப் படம் அமைந்துள்ளது. ஆல்பிரட் துரையப்பா படுகொலையுடன் படம் நிறைவடைகிறது. அடுத்த பாகங்கள் வரும் என்று சொல்லப்படுகிறது.

கிட்டு என்பவர் படத்தை இயக்கியிருக்கிறார். படத்தில் நிறைய தகவற் பிழைகள் இருப்பதாக பலர் சொல்கிறார்கள். இயக்குனர் கிட்டு தமிழ்நாட்டின் தலைவர்களைப் பற்றி கொச்சையாகவும், ஆபாசமாகவும் பதிவுகளை இட்டு இருப்பது பற்றிய சர்ச்சைகளும் உருவாகி உள்ளன. ஈழத்தில் அடக்குமுறைக்கு எதிராக போராடிய ஒரு தலைவரைப் பற்றி உயர்வாக படம் எடுத்துக் கொண்டு, மறுபுறம் தமிழ்நாட்டில் அடக்குமுறைக்கு எதிராக போராடிய மற்றும் போராடிக் கொண்டிருக்கின்ற தலைவர்களைக் கொச்சைப்படுத்துகின்ற முரணை பலர் சுட்டிக் காட்டுகிறார்கள். இயக்குனர் கிட்டு அந்தப் பதிவுகளை அழித்து விட்டார். அவருடைய சிந்தனையும் மாறி இருந்தால் மகிழ்ச்சி.

படத்தில் தகவற் பிழைகள் இருப்பதாக வருகின்ற குற்றச்சாட்டுகள் பற்றிச் சொல்ல வேண்டும். திரைப்படத்தைச் சுவையாக்குவதற்காக சில பிழைகள் வேண்டும் என்றே விடப்பட்டுள்ளன போல் தெரிகிறது. தலைவர் பிரபாகரன் வீட்டில் பிறக்கிறார். அவருடைய தந்தை அறப் போராட்டங்கள் பற்றி தமிழரசுக் கட்சியினருடன் திட்டமிடுகிறார். இப்படியான காட்சிகள் சினிமாவுக்காக சேர்க்கப்பட்டிருக்கலாம்.

சில கற்பனைப் பாத்திரங்களும் வருகின்றன. அல்லது பாத்திரங்களின் பெயர்களும் செயற்பாடுகளும் மாற்றப் பட்டிருக்கின்றன. சில சம்பவங்களும், நடந்த இடங்களும் மாற்றப் பட்டிருக்கின்றன. ஆயினும் ஈழப் போராட்டம் பற்றி இதுவரை வந்த படங்களுக்குள் உண்மையான வரலாற்றுக்கு மிகக் கிட்டவாக இந்தப் படம் இருக்கிறது என்பதை மறுத்து விட முடியாது.

படம் தென்குமரிக் கண்டம் என்கின்ற கற்பிதமான கோட்பாட்டுடன் ஆரம்பிக்கிறது. பழைய தமிழ் இலக்கியங்கள் தென்குமரிக்

கண்டம் என்கின்ற நிலப் பரப்புப் பற்றிப் பேசுவது உண்மைதான். 1860களில் சில விலங்கியலாளர்கள் ஒரு ஆய்வை முன்வைத்தார்கள்.

ஆபிரிக்கா, இந்தியாவின் தென்பகுதி, அவுஸ்ரேலியா போன்றவற்றை இணைத்து ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்திருக்க வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். தமிழ் இலக்கியங்கள் கூறிய தென்குமரிக் கண்டம் இதுதான் என்கின்ற முடிவுக்கு சில தமிழ் அறிஞர்கள் வந்தார்கள். இப்படித்தான் இந்த ‘லெமுரியா’ என்கின்ற தென்குமரிக் கண்டக் கோட்பாடு உருவானது. பின்னர் உருவான ‘கண்டங்களின் நகர்வு’ குறித்த அறிவியல் ஆய்வுகள் ‘லெமுரியா’ என்கின்ற ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்திருக்க முடியாது என்பதை உறுதியாக சொல்லி விட்டன. ஒரு வரலாறு பற்றி படம் எடுக்கின்ற போது, இப்படியான ஒரு கற்பிதத்துடன் ஆரம்பித்திருக்கக் கூடாது.

மேதகு படம் பேசுகின்ற இரண்டு விடயங்களைச் சிக்கலானதாக நான் கருதுகின்றேன். யாழ் நகர மேயராக இருந்த ஆல்பிரட் துரையப்பா படத்தின் பிரதான வில்லனாக வருகின்றார். விடுதலைப் புலிகளின் தலைவர் பற்றி படம் எடுக்கின்ற போது, ஆல்பிரட் துரையப்பா என்கின்ற பாத்திரத்தைத் தவிர்த்து விட்டு, படத்தை எடுத்து விட முடியாது என்பது உண்மைதான். படத்தில் இளைஞர்கள் தன்னெழுச்சியாக முடிவெடுத்து ஆல்பிரட் துரையப்பாவை கொலை செய்வதாகக் காட்சிப் படுத்தியிருந்தார்கள். 1974இல் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழராய்ச்சி மாநாட்டில் 11 பேர் இறந்து போன சம்பவத்திற்கு ஆல்பிரட் துரையப்பாவே காரணம் என்பது போல் படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

ஆல்பிரட் துரையப்பாவை ‘துரோகி’ என்று முத்தரை குத்தி, அவரை கொலை செய்வதற்கு இளைஞர்களைத் தூண்டி விட்டதில் அன்றைய தமிழர் ஐக்கிய முன்னணிக் கட்சியினருக்கு மிக முக்கிய பங்கு இருக்கின்றது. ஆல்பிரட் துரையப்பா யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேட்சையாக நின்று இரண்டு தடவைகள் வெற்றி பெற்றார். ‘துரையப்பா துரோகி’ என்பது மேடையில் வெறும் அரசியல் பேச்சாகத்தான் ஆரம்பித்தது. பின்னர் மெதுவாக ‘துரையப்பா கொல்லப்பட வேண்டியவர்’ என்றார்கள். ‘சாவு இயற்கையாக வராது, எமது இளைஞர்களின் கைகளால் அது நடக்கும்’ என்றெல்லாம் பேசத் தொடங்கினார்கள்.



இப்படியான ஒரு நேரத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. ஐம்பதாயிரம் பேர் வரையில் அங்கே கூடியிருந்தார்கள். சந்திரசேகர என்கின்ற காவல்துறை அதிகாரி தனது ஜீப்பை வேண்டும் என்றே மக்கள் மத்தியில் விட்டதனால் குழப்பமான சூழ்நிலை உருவானதாக சொல்கிறார்கள். தொடர்ந்து காவல்துறையினர் மக்கள் மீது தடியடியும் கண்ணீர்புகைக் குண்டுத் தாக்குதலும் நடத்தினார்கள்.

காவல்துறையினர் வானத்தை நோக்கி துப்பாக்கியாலும் சுட்டார்கள். அதில் மின்கம்பி அறுந்து விழுந்ததில் மின்சாரம் தாக்கி பலர் இறந்தார்கள். சிலர் நசிப்பட்டும், அதிர்ச்சியில் ஏற்பட்ட மாரடைப்பிலும் இறந்தார்கள். பின்னர் உருவாக்கப்பட்ட உத்தியோகப் பூர்வமற்ற ஆணைக்குழுவின் விசாரணைகள் இப்படியான தகவல்களைத்தான் சொல்கின்றன. காவல் துறையினர் நேரடியாக மக்கள் மீது துப்பாக்கியால் சுட்டதாகவோ, அல்லது ‘மேதகு’ படத்தில் வருவது போன்று காலால் மிதித்து மக்களைக் கொலை செய்ததாகவோ நடுநிலையான தகவல்கள் ஏதும் இல்லை.

இந்த இறப்புகளுக்கான பழி, ஆல்பிரட் துரையப்பா மீது போடப் பட்டது. அவர்தான் மக்களைக் கொலை செய்தார் என்கின்ற பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இளைஞர்களின் உணர்ச்சிகள் தூண்டி விடப்பட்டன. சிங்கள அரசின் அடக்குமுறைகளால் ‘திருப்பி அடிக்க வேண்டும்’ என்கின்ற கோபத்தோடு இளைஞர்கள் நின்றார்கள். இந்த நிகழ்வுகளின் விளைவாக ஆல்பிரட் துரையப்பா படுகொலை நடந்தது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய காரணியாக தரப்படுத்தல் சட்டத்தை ‘மேதகு’ திரைப்படம் முன்வைக்கின்றது. இது பற்றிய விவாதங்களும் பல இடங்களில் நடக்கின்றன. இன்றைக்கு நடைமுறையில் உள்ள வெட்டுப்புள்ளி முறை பற்றி பெரியளவில் எதிர்ப்புகள் இல்லாத சூழ்நிலையில், அன்றைய தரப்படுத்தல் சட்டத்திற்க்கு எதிரான போராட்டம் பற்றிய கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

*1967*இல் தரப்படுத்தல் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அப்பொழுது அது மொழி அடிப்படையில் அமைந்ததாக சொல்லப்படுகிறது. தமிழ் மொழி மூலம் படித்தவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு அதிக புள்ளிகளைப் பெற வேண்டி இருந்தது. சிங்கள மொழி மூலம் படித்தவர்கள் குறைந்த புள்ளிகளோடு பல்கலைக் கழகம் செல்ல முடிந்தது. அன்றைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து நிறையத் தமிழர்கள் பல்கலைக்கழகம் செல்கின்ற ஒரு சூழ்நிலை இருந்தது. தரப்படுத்தல் சட்டம் இந்த நிலையை மாற்றியது.

எதிர்ப்புக்கள் காரணமாக இந்தச் சட்டம் மாவட்ட அடிப்படையிலானதாக மாற்றப்பட்டது. சிலர் இதை தமிழ்நாட்டின் சமூகநீதித் திட்டங்களோடு ஒப்பிடுவார்கள். தமிழ்நாட்டில் அடக்கப்பட்ட சமூகங்கள் முன்னேறுவதற்காக இடஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், அதற்கும் இலங்கையின் மாவட்ட ரீதியான தரப்படுத்தல் முறைக்கும் சம்பந்தம் இருப்பதாக நான் கருதவில்லை.

இலங்கையிலும் சமூக ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. அடக்கப்பட்ட சமூகங்கள் தமது சமமான கல்வி கற்றல் உரிமைக்காக போராடி வேண்டி இருந்தது. அடக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களில் பலர் அப்பொழுதுதான் முதற் தலைமுறையாகப் படிக்க ஆரம்பித்திருந்தார்கள். இவர்களைக் கருத்தில் கொண்டு இந்தத் தரப்படுத்தல் சட்டம் கொண்டு வரப்படவில்லை. ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிக்க

சமூகத்திடம் இருந்த கல்வி வாய்ப்பு, இன்னொரு மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிக்க சமூகத்திடம் மாற்றப்பட்டது. அடக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த முயற்சியில் மற்றவர்களோடு போட்டி போட்டு முன்னேற வேண்டி இருந்தது.

மாவட்ட ரீதியான தரப்படுத்தல் மற்றைய தமிழ் மாவட்டங்களில் இருந்தும், மாணவர்கள் பல்கலைக் கழகம் போவதற்கான வாய்ப்பை உருவாக்கியது. ஆனால், ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற போது, பல்கலைக் கழகம் போகின்ற தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போனது என்பதுதான் உண்மை.

தரப்படுத்தல் சட்டம் அன்றைக்கு யாழ் மாவட்டத்திற்கு மிகப் பெரிய பாதிப்பைக் கொடுத்தது. ஆனால், விடுதலைப் போராட்டத்திற்கு அதை முதன்மையானக் காரணமாக சொல்வது ஏற்புடையது அல்ல. விடுதலைப் போராட்டத்திற்கு எல்லா மாவட்டங்களில் இருந்தும் தமிழர்கள் வந்தார்கள். கிழக்கில் இருந்து நிறைப் பேர் போராட்டத்தில் இணைந்தார்கள். இலங்கை முழுவதும் தமிழர்கள் ஒடுக்கப் பட்டார்கள், படுகொலை செய்யப் பட்டார்கள். அந்த வகையில் தரப்படுத்தல் சட்டத்தை விடுதலைப் போராட்டத்தின் முதன்மைக் காரணமாக முன்னிறுத்துவது, எதிர்காலத்தில் போராட்டத்தின் நியாயத் தன்மையைப் புரிந்து கொள்வதில் சிக்கல்களை உருவாக்கி விடக் கூடும்.

எது எப்படி இருப்பினும் ஒரு வரலாற்றை, அந்த வரலாற்றோடு நேரடித் தொடர்பு உடையவர்கள் வாழ்கின்ற காலத்திலேயே படமாக்குவது மிகச் சிரமமானது. அந்த வகையில் ‘மேதகு’ திரைப்படம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றிருக்கிறது.



# பணமின்றியப் பிணமாக இலங்கை

**தேவன்**

இலங்கை தனது பொருளாதார வீழ்ச்சியின் "தாண்டக் கூடாத எல்லையையும்" இம்மாத ஆரம்பத்தில் தாண்டியிருக்கிறது. நடுத்தர வருமதியுடையோர் நாடு என்ற தரத்திலிருந்து, மிகக்குறைவான வருமதியுடையோர் நாடு என்ற நிலைக்கு இலங்கையைத் தள்ளியிருக்கிறது உலகவங்கி. அதிலும் சூடானை பின்தள்ளி, இலங்கை இரண்டாவது இடத்திற்கு முன்னேறியிருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணங்களாக எல்லையற்ற கடன்கள் பெறப் பட்டமையையும், அதன் இறைமைப் பிணைமுறி பற்றியும் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் எழுதியிருப்பதைக் கீழே இணைக்கிறேன்....

இங்கு இலங்கை தன்னுடைய மூன்று வகையான அன்னிய *(external sector)* கடன்களை கட்டமுடியாத நிலைமை இருக்கிறது. ஒன்று வேறு நாடுகளில் இருந்து பெற்றுக்கொண்ட கடன்கள். உதாரணமாக சீனா, இந்தியா மற்றும் யப்பான். இரண்டாவது; சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள், உதாரணமாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணைய நிதியம். இந்த இருவகையான கடன்களையும் மீளச்செலுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் கால அவகாசத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

ஆனால், பெரிய பிரச்சினையாக இருக்கும் இந்த மூன்றாவது வகையான கடன் என்பது இலங்கை விற்றிருக்கும் இறைமைப் பிணைமுறிகள் ***(sovereign bond)*** ஆகும். இவை பாரிய அளவில் மீள்செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. சர்ச்சைக்குரிய விடயம் என்ன வென்றால்? தேசிய இறைமை தொடர்பாக பரவலாக பேசும் எங்களுடைய தேசிய அரசியல் தலைவர்கள்தான் கடந்த பன்னிரண்டு வருடகாலத்தில் தொடர்ந்து இறைமையைப் பிணைமுறியாக விற்றுள்ளார்கள்.



அந்த விதத்தில் தற்போது இலங்கையினுடைய அன்னிய செலவீனம் ***(foreign exchange)*** 7.5 பில்லியன் அமெரிக்க டொலர் (750 கோடி அமெரிக்க டொலர்). அதாவது 4.5 மாதங்களுக்கான இறக்குமதி பொருட்களுக்கான அன்னிய செலவீனமாக இது அமைகிறது. இவ்வாறு இருக்க, அடுத்த பன்னிரண்டு மாதத்திற்குள் மீள்செலுத்த வேண்டிய இறைமைப் பிணைமுறி மற்றும் அன்னிய கடன்களின் மொத்தத்தொகை 4.8 பில்லியன் அமெரிக்க டொலர். கலாநிதி அகிலன் கதிர்காமர் - சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.)

இறைமைப் பிணைமுறி என்பது, இறைமைகளை விற்பதையே குறிக்கும். நிலங்கள், வளங்கள், அரச உடைமைகள் என்பனவற்றை இலங்கை விற்க ஆரம்பித்தது பற்றி ஏற்கனவே நீங்கள் அறிவீர்கள். இதிலும் சீனாவிடம் விற்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் இனி மீளப்பெற முடியாதவை. தனிநபர் கடன் 500,000 ஐத் தாண்டியிருக்கும் நிலையில், மக்களின் வாழ்விற்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை இறக்குமதி செய்யும் நிலையில் கூட இலங்கை இல்லை என்பது அதிர்ச்சிக்குரிய சாதாரண உண்மை.



## இந்தத் திருடன் எவ்வாறு இலங்கையை மீட்கப்போகிறார்?

இதற்கெல்லாம் தீர்வு காண்பதற்கு, திரு பசில் ராசபக்சே அவர்களை நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சு ஒன்றின் அமைச்சராக நியமிப்பதன் மூலம், இலங்கை எதிர் கொண்டு நிற்கும் நிதிப் பிரச்சனையைக் களைய முடியும் என “மகா வம்சக் கனவில்” சிங்கள தேசம் மூழ்கியிருக்கிறது. ஆனால், மகிந்த ராஜபக்சே காலத்தில் பொருளாதார விவகார அமைச்சராக இருந்த திரு பசில் ராஜபக்சே அவர்கள், இலங்கை அரசுக்கு சொந்தமான கோடிக்கணக்கான பணத்தைத் திருடியதைத் தவிர, எதையும் சாதிக்க வில்லை. அவர் திருடிய பணமும், அதன் மூலமும் இங்கே பட்டியலிடப் படுகிறது.

சுனாமி பேரனர்த்தத்தின் போது சேகரிக்கப்பட்ட 83 மில்லியன் ***(820,000 US dollars)*** பணத்தைத் தனது சொந்த கணக்குகளுக்கு மாற்றிய மோசடிகளின் சூத்திரதாரியாக திரு பசில் இருக்கிறார்.

சட்டவிரோத பண பரிமாற்றத்தினை ***(Money Laundering)*** மூலம் மல்வானை பகுதியில் 208




*மில்லியன் ரூபா பெறுமதியான* ***64*** *ஏக்கர் நிலப்பரப்பில் சொகுசு பங்களா, நீச்சல் தடாகம் மற்றும் பண்ணை என்பவற்றை சொந்தமாக்கிய சம்பவங்களுடனும் திரு பசில் தொடர்புபட்டு இருக்கிறார்*

*திவிநெகும அபிவிருத்தி திணைக் களத்திற்கு சொந்தமான ரூபா* ***2,991*** *மில்லியன் பணத்தை மோசடி செய்த குற்றச்செயல்களுடனும் பசில் தொடர்புபட்டு இருக்கிறார்*

*அதே போன்று திவிநெகும அபிவிருத்தி திணைக்களதிற்கு சொந்தமான மற்றுமொரு* ***29.4*** *மில்லியன் அரச பணத்தை மோசடி செய்து,* ***5****மில்லியன் பஞ்சாங்கங்களை அச்சிட்டு, அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திய குற்றங்களின் பின்னணியிலும் பசில் இருக்கிறார்*

*இதே போல சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற்ற* ***1,067*** *சமுர்த்தி அதிகாரிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட* ***1,700*** *மில்லியன் அரச நிதி கொடுப்பனவில் நடந்த மோசடிகளுடனும் திரு பசில் தொடர்பு பட்டு இருக்கிறார்*

*சட்டவிரோத பணபரிமாற்றம்* ***(Money Laundering)*** *ஒன்றின் மூலம் கம்பகா மாவட்டம் உறுத்தோட்ட பகுதியில்* ***10*** *மில்லியன் பெறுமதியான நிலம் ஒன்றை கொள்வனவு செய்த மோசடிகளுடனும் திரு பசில் தொடர்புபட்டு இருக்கிறார்*

*சட்டவிரோத பணப்பரிமாற்றம்* ***(Money Laundering)*** *மூலம் மாத்தறை மாவட்டம்* ***Brown Hill*** *பகுதியில்* ***64*** *மில்லியன் பெறுமதியான* ***18*** *ஏக்கர் நிலம் ஒன்றை வாங்கிய குற்றச்செயல்களின் பின்னணியிலும் திரு பசில் இருக்கிறார்*

*நாட்டில் உள்ள* ***158*** *பிரதேச சபைகளுக்கு வழங்குவதற்க்கென* ***35*** *மில்லியன் பெறுமதியில் வாங்கப்பட்ட* ***GI Pipes*** *தொடர்பான அரச நிதி மோசடிக் குற்றங்களுடனும் திரு பசில் ராசபக்சே தொடர்புபட்டு இருக்கிறார்*

*இது தவிர, மட்டக்களப்பு மாவட்டம் பாசிக்குடா பகுதியில் சட்டவிரோத பணப்பரிவர்த்தனை* ***(Money Laundering)*** *மூலம் சுற்றுல்லா அபிவிருத்தி என்கிற பெயரில் பல ஏக்கர் நிலம் மற்றும் உல்லாச விடுதிகளை திரு பசில் சொந்தமாக்கி இருக்கிறார்*

*இது போதாதென்று கிழக்கின் உதயம், வடக்கின் வசந்தம், வீதி புனரமைப்பு திட்டங்கள் உட்பட சகல அரச பொருளாதார நிகழ்ச்சி திட்டங்களிலும் பசில் மோசடி செய்து இருக்கிறார்.*

*அதே போல* ***2007****, நவம்பர்* ***16****ம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதீடு மீதான வாக்கெடுப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொள்ள விடாது தடுப்பதற்காக, அவர்களின் உறவினர்களைப் பிள்ளையான் குழு மூலம் கடத்திய கோர சம்பவத்தின் பின்னணியிலும் திரு பசில் அவர்களே செயல்ப்பட்டு இருந்தார்*

*மேற்குறித்த சாதனைகளை தவிர, ஒரு நாட்டின் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களைக் கையாளக் கூடிய கல்வி தகுதியோ* ***(Academic Background)*** *அல்லது தொழில் தகுதியோ* ***(Professional Qualification)*** *அல்லது அனுபவமோ* ***(professional Experience)*** *என எதுவும் திரு பசில் ராசபக்ச அவர்களிடம் கிடையாது*

*ஓர்முறை திருடிச் சுகம்கண்டவன், பலமுறை திருடமுனைவான் எனச் சொல்லுவார்கள். திரு பசில் ராசபக்ச அவர்களுக்கு இது மிக பொருத்தம். இந்தத்திருடன் எவ்வாறு இலங்கையை மீட்கப்போகிறார்? என்பது தலதா மாளிகைக்கே வெளிச்சம்...*

# Jaffna Stores

Geschäftsführer : Herr Thayaharan Nadarajah

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

## மண்மணம் மாறாத சுவைதரும்
## தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்



ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

www.jaffnastores.com
info@jaffnastores.de

Tel. - 0521 174794
Mobile - 01732807906

Feilenstraße 8
33602 Bielefeld





பூமிபுத்திரன்

# ஆப்கானில் எட்டாக் கனியாகுமா அமைதி?

20 ஆண்டு ஆக்கிரமிப்புப் போரின் பின்னர் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறும் முடிவை அமெரிக்கா வெளியிட்டு உள்ளது. அந்த மண்ணில் நிலை கொண்டுள்ள அமெரிக்க சார்பு நேட்டோ அணியின் பெரும்பாலான நாடுகள், தங்கள் படையினரை முழுவதுமாக வெளியேற்றிக் கொண்டுள்ள நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் 11-ஆம் திகதியுடன் அமெரிக்கப் படைகள் முழுவதுமாக வெளியேற்றப்பட்டுவிடும் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

20 வருட கால கொடிய யுத்தம், பெரும் உயிரிப்பு மற்றும் சொத்திழப்பை ஏற்படுத்தியது மாத்திரமன்றி, பெரும்பாலான மக்களை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாக ஆக்கி வைத்திருக்கின்றது. 2001 செப்டெம்பரில், அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதல்களின் பின்னர், அன்றைய அமெரிக்க அரசுத் தலைவராக இருந்த ஜோர்ஜ் புஷ் பிரகடனம் செய்த 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' உலகின் பல பாகங்களிலும் பேரழிவையும், புதிய பயங்கரவாதத்தையும் தோற்றுவித்துள்ளதைப் பார்க்க முடிகின்றது.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதத்தை ஒழித்துக் கட்டுவதாகக் கூறிக்கொண்டு எந்தத் தலீபான்களை ஆட்சியில் இருந்து அமெரிக்கா பலவந்தமாக அகற்றியதோ, அதே தலீபான்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியே இறுதியில் படைவிலகல் செய்ய வேண்டிய அவமானகரமான நிலைக்கு அமெரிக்கா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈற்றில், அமெரிக்கா நினைத்த எதுவுமே நடைபெறவில்லை. தலீபான்கள் முன்னரைவிடவும் பலங்கொண்ட சக்திகளாக வளர்ந்திருக்கின்றார்கள்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் அந்த நாட்டில் உருவாகி, தலீபான்களுக்கே சவால்விடும் நிலை உருவாகியுள்ளது. அது மட்டுமன்றி, வேறுபல அதிதீவிர வன்முறை அமைப்புக்களும் ஆப்கானிஸ்தானில் தோன்றியுள்ளன.

மேற்குலகப் படைகள் வெளியேறும் நிலையில், காபுலில் உள்ள பொம்மை அரசாங்கம் எந்த நிமிடத்திலும் கவிழலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. "பலவந்தமாக தலைநகர் காபுலைக் கைப்பற்றப் போவதில்லை" என தலீபான்கள் வாக்குறுதி வழங்கியிருந்தாலும், இயல்பாகவே காபுல் அவர்களின் கட்டுப்பாட்டில் வந்துவிடக் கூடிய அறிகுறிகளே தென்படுகின்றன.

அன்றாடம் வரும் செய்திகளின் படி, ஆப்கானிஸ்தானின் பல பிரதேசங்கள் தலீபான்களின் கட்டுப்பாட்டில் வந்து கொண்டிருக்கின்றன. தலீபான்களை எதிர்க்க வலுவற்ற அல்லது எதிர்க்க விரும்பாத ஆப்கானிஸ்தான் ஆயுதப் படைகள் தலீபான்களுடனான மோதல்களைக் கைவிட்டுப் பின்வாங்கி வருகின்றன. வெகுவிரைவில், ஆப்கான் ஆயுதப் படைகள் தலீபான்களுடன் கரங்கோர்க்கும் செய்திகளும் கூட வரக்கூடும் என்பதே நடைமுறை யதார்த்தமாக உள்ளது.

படையினரை முற்றாக விலக்கிக் கொள்வதாக அறிவித்துள்ள போதிலும், காபுலில் உள்ள தனது தூதுவரகத்திலும்; காபுல் பன்னாட்டு விமான நிலையத்திலும் பாதுகாப்புக்காக ஆயிரம் வரையான படையினரை நிலைநிறுத்தப் போவதாக அமெரிக்கா கூறியுள்ளது. இதேபோன்று ஐக்கிய இராச்சியமும் தனது தூதுவராலயப் பாதுகாப்புக்குக் குறிப்பிட்ட எண்ணிக்கையான படையினரை நிறுத்தி வைக்கப் போவதாகத் தெரிவித்துள்ளது. அது மாத்திரமன்றி, ஆப்கான் படையினருக்கானப் பயிற்சி நடவடிக்கைகளும் தொடரும் என அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த அறிவிப்புக்களுக்கு எதிரான தனது கருத்தைப் பதிவு செய்துள்ள தலீபான்கள், "படை விலக்கல் இறுதித் திகதியென அறிவிக்கப்பட்டுள்ள செப்டெம்பர் 11-ஆம் திகதிக்குப் பின்னர் ஆப்கானிஸ்தான் மண்ணில் நிலைகொண்டிருக்கும் படையினர் ஆக்கிரமிப்புப் படையினராகவே கருதப்படுவர்.

எனவே, அத்தகைய படையினர் தமது தாக்குதல் இலக்காகக் கொள்ளப்பட வாய்ப்புள்ளது" எனத் தெரிவித்துள்ளனர். அது மாத்திரமன்றி, ஆப்கானிஸ்தானில் இராணுவ ஆலோசகர்கள் என்ற பெயரில் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் படையினரும், தனியார் பாதுகாப்பு நிறுவனத்தினரும் கூட நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் எனவும் தலீபான்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

செப்டெம்பர் 11-இன் பின்னான சூழ்நிலைகள் மீண்டும் அமெரிக்காவுக்கும், தலீபான்களுக்கும் இடையிலான மோதல்களுக்குக் களம் அமைக்குமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது. எதிர்பார்த்தபடி மோதல்




உருவாகினால் ஆப்கானிஸ்தானின் கிட்டிய எதிர்காலம் வன்முறைக் களமாகவே இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மறுபுறம், மேற்கு நாட்டுப் படையினரிடம் மொழிபெயர்ப்பாளர்களாகவும், உதவியாளர்களாகவும் பணிபுரிந்த ஆயிரக்கணக்கான ஆப்கான் பிரசைகளின் எதிர்காலம் தொடர்பிலும் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. இவர்கள் அமெரிக்காவில் பிரசாவுரிமை கோரி விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப் பட்டாலும், விண்ணப்பித்து விட்டுக் காத்திருப்பவர்களின் கோவைகளைப் பரிசீலனை செய்வதில் தாமதம் ஏற்படுவதாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் தலீபான்களின் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு உட்படும் அபாயம் உள்ளதாக அச்சம் தெரிவித்துள்ள அமெரிக்கப் படைகளின் முன்னாள் உதவியாளர்கள் தமது விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதைத் துரிதப்படுத்துமாறு கோரி, காபுலில் உள்ள அமெரிக்கத் தூதுவராலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

'விசேட குடிப்பெயர்வு நுழைவிசைவுத் திட்டத்தின்' கீழ் அமெரிக்க மற்றும் நேட்டோ படையினரிடம் பணியாற்றிய ஊழியர்களையும், அவர்களின் உறவினர்களையும் அமெரிக்காவில் குடியமர்த்த அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ள போதிலும், அதற்கான பணிகள் மந்தகதியிலேயே நடைபெற்று வருவதைப் பார்க்க முடிகின்றது. இவ்வாறு அமெரிக்காவுக்குக் குடிபெயரத் தகுதி பெற்ற 18,000 பேரில் அரைவாசிக்கும் குறைவானோரின் விண்ணப்பங்களே இதுவரை பரிசீலிக்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது. இந்தத் தாமதம், அமெரிக்காவுக்குக் குடிபெயரக் காத்திருப்போர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், குறித்த நபர்களைத் தற்காலிக அடிப்படையில் வேறு நாடுகளில் தங்க வைப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கென, ஆப்கானிஸ்தானின் அயல்நாடுகளான கசாக்கிஸ்தான், உஸ்பெக்கிஸ்தான், தஜிக்கிஸ்தான் ஆகியவற்றுடன் அமெரிக்கா பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளது.

பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும் பட்சத்தில், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த முன்னைநாள் மொழிபெயர்ப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் முதற்கட்டமாக குறித்த மூன்று



நாடுகளிலும் தங்க வைக்கப்படுவார்கள். அவர்களின் விண்ணப்பங்கள் படிப்படியாகப் பரிசீலிக்கப்பட்டு, அமெரிக்காவில் நிரந்தரமாகக் குடியேறுவதற்கான அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மத்திய ஆசிய நாடுகளான கசாக்கிஸ்தான், உஸ்பெக்கிஸ்தான் மற்றும் தஜிக்கிஸ்தான் என்பவற்றோடு அமெரிக்கா செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் முன்னைநாள் ஆப்கானிய உதவியாளர்கள் தற்காலிகமாகத் தங்க வைக்கப்படுவது மாத்திரமன்றி, அந்த நாடுகளில் இருந்து ஆப்கான் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல், கண்காணித்தல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவையும் அமெரிக்காவின் இலக்குகளாக உள்ளன. இது தொடர்பான மேலதிக விடயங்களைப் பற்றிப் பேசுவதற்காக உஸ்பெக்கிஸ்தான் மற்றும் தஜிக்கிஸ்தான் ஆகிய நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் அமெரிக்கா சென்றுள்ளனர்.

அண்மைய வரலாற்றில் அதிக காலமாகப் போர்ச் சூழலில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட மக்களாக ஆப்கானிஸ்தான் மக்கள் உள்ளனர். தொடர்ச்சியான போர் பல தலைமுறைகளைக் கடந்தும் நடைபெற்றுவரும் நிலையில், அமெரிக்கப் படையினரின் வெளியேற்றம் அந்த நாட்டு மக்களுக்கு அமைதியான வாழ்வை மீட்டுத்தரும் என இலகுவில் சொல்லிவிட முடியாத களச் சூழலே அங்கு உள்ளது. போர் மாத்திரமன்றி, அரச நிர்வாகத்தில் காணப்படும் ஊழலும் அந்த மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு இடைஞ்சலாக உள்ளது.

ஆப்கானிஸ்தானை யார் ஆட்சி செய்ய வேண்டும்? என்பதை அந்த நாட்டு மக்களே முடிவு செய்ய வேண்டும். அதை விடுத்து தான் விரும்பிய ஒருவரே அந்த நாட்டை ஆள வேண்டும் என்ற அமெரிக்காவின் மனநிலை தொடருமாக இருந்தால், அமைதி என்பது அந்த நாட்டு மக்களுக்கு எட்டாக்கனியாகவே அமையும்.



ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

புலிகள் இயக்கம் புலிப்பண்பாட்டின் மூலம் உணர்வுகளின் வழியாக, பலமான அடித்ததளத்தில் இருந்து கட்டப்பட்ட இயக்கம். எதிரிகள் தலைமையை அழித்தாலும், அது மீண்டும் பலமான தலைமையைப் பெரும் வல்லமையுடையது. இதை எதிரிகளால் கொல்லப்பட்ட எழுத்தாளர் தராகி சிவராம் பலமுறை கூறியுள்ளார்கள்.

புலிவீரர்கள் உணர்வுகளின் அடிப்படையில் விடுதலைக்குப் போராடுவதனால், அவர்கள் முழு அர்ப்பணிப்புடன் போராட முடிந்தது. மாறாக எதிரிப்படைகள் மேலிருந்து ***(TopDown)*** திட்டமிட்டு கட்டப்பட்டவை. போர் வீரர்கள் வறுமையின் காரணமாக வேறுவழி இல்லாமல் இராணுவத்தில் இணைவதால், அவர்களிடம் உண்மையான அர்ப்பணிப்பு, உணர்வு, ஓர்மம் கிடையாது. புலிகளால் எந்த ஒரு சம்பளமும் பெறாமல், எதிரிகளை விட பலமடங்கு மனபலம்



**“பலவீனமான மக்களின் பலம் மிக்க ஆயுதமாகவே கரும்புலிகளை உருவாக்கினேன்”**

**- பிரபாகரன் அவர்கள்**

வாய்ந்த படைகளை உருவாக்க முடிந்ததற்குக் காரணம் அது கீழிருந்து கட்டியமைக்கப்பட்ட இயக்கம்.

2009 இழப்புக்குப் பின் பெரிய போராட்டங்கள் நடக்காமல் இருப்பதற்கு








புலிப்பண்பாட்டு இழப்புதான் காரணம், தலைமை இழப்பு அல்ல. ஆப்கானிசுத்தானிலும், ஈராக்கிலும் பல வருடங்களாக அமெரிக்காவும், அதன் துணை நாடுகளும் போர் புரிந்து, பல இயக்கங்களின் தலைமைகளைக் கொன்றாலும், போர் முடிவிற்கு வராததற்குக் காரணம், அவ்வியக்கங்களும் கீழிருந்து மேலாக ஒரு பண்பாட்டின் மூலம் கட்டியமைக்கப் பட்டிருப்பதுதான். அவர்களின் தலைமை அழிய, புதிய தலைமைகள் முன்பைவிட வீரியமாகத் தோன்றி, சிக்கலைக் கூட்டுகிறது. அவர்களின் பண்பாட்டை மாற்றாமல் வெற்றி என்பது நடக்காத காரியம்.

மேலிருந்து திட்டமிட்டு கட்டியமைப்பது என்பது, நியூட்டன் சட்டகம். பிரபாகரன் சட்டகத்தில் (சிக்கல் அமைப்பு) கீழிருந்து மேலாக கட்டியமைக்கப்படும். அவ்வாறாக கீழிருந்து கட்டியமைக்கப்படும் இயக்கங்களே நீண்டகாலம் தாக்குப்பிடித்து, மாறும் சூழலுக்கு ஏற்ப தகவமைத்து வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளைக் கூட்டுகிறது.

இன்றைய திராவிடக் கட்சிகள் பார்ப்பதற்குப் பலமாக இருந்தாலும், அவை ஒரு தலைமையால், பணத்தால் மேலிருந்து கீழாக கட்டியமைக்கப்பட்ட இயக்கங்கள். தலைமையோ அல்லது தொடர்ந்து பண வரவோ இல்லையென்றால், அவை எளிதில் சிதையும் தன்மை கொண்டது. அவை நீண்டகாலம் நீடிக்கப்போவதில்லை. கீழிருந்து மேலாகக் கட்டியமைக்கப்படும் இயக்கங்களே நிலைத்து நிற்கும். மத இயக்கங்கள் பல ஆயிர வருடங்களாக இன்றும் நிலைத்து நிற்பதற்குக் காரணம் அவை கீழிருந்து மேலாகக் கட்டியமைக்கப்பட்ட இயக்கங்கள். அவர்களின் பலம் என்பது சாதாரண மனிதனின் நம்பிக்கையில் பிறக்கிறது.

3. புலிகளின் பொருளாதார பலமும், ஆட்பலமும் மிகக்குறைவானது என்பதால், தவறுகள் என்பது பாரிய இழப்பை உண்டாக்கும். துல்லியமான தகவல்கள் அவர்களின் சிக்கனமான நடவடிக்கைகளில் முக்கிய பங்கை வகித்தது. எதிரிகளின் நிலைகளையும், திட்டங்களையும் அறிவதின் மூலமே, அவற்றிற்கு எதிராக சிறந்த நகர்வுகளை மேற்கொள்ள முடியும்.




புலிகளின் புலனாய்வுப் பிரிவு இதில் மிகச்சிறப்பாக செயலாற்றியது. அவ்வாறு நல்ல தகவல்களின் அடிப்படையிலே புலிகளின் தாக்குதல்கள் அமைந்ததால், அவர்களின் திட்டம் குறி தவறுவதில்லை. அதேநேரம் புலிகள் தங்கள் நிலைகளைத் திட்டங்களை இரகசியம் காத்தார்கள். எதிரிப்படைகளுக்கு எங்கே தாக்குதல் நடக்கும்? என்பது தெரியாததால், அவர்கள் அனைத்து நிலைகளிலும் தயாராகவே இருக்கவேண்டும். இது எதிரிகளின் ஆற்றலை வீணடித்தது.

4. புலிகள் இயக்கம் ஒரு கைத்துப்பாக்கியில் ஆரம்பித்து, வான்படை வரை வளர்ந்தது. தொடர்ந்து கற்று புதிய, புதிய அணிகளையும், படைகளையும் உருவாக்கிக் கொண்டே இருந்தார்கள். இதற்கான அடிப்படை சூத்திரம் என்பது, இருக்கும் பொருளாதாரத்தையும், ஆட்பலத்தையும் கொண்டு எந்தப் படையணியை உருவாக்கினால் அதிக வாய்ப்புகள் கிட்டும்? என்பதுதான். இதற்கு சிறந்த உதாரணம் கருப்புலிப் படையணிதான்.

சிறிய குழுவினால் ஆன இப்படை, ஆழ ஊடுருவி, எதிரியை அவனது நிலத்திற்குள்ளேயே பாய்ந்து, இராணுவ இலக்கைத் தாக்கி, எதிரிக்கு பெரும் சேதத்தை உருவாக்கும். இதுபோன்ற தாக்குதல் எங்கு வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதால், இது தாக்குதலுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்குகிறது. எதிரி தனது முக்கிய நிலைகளை எப்பொழுதும் தீவிரமாக காத்துக் கொண்டிருக்க வேண்டும். இது அவர்களின் பொருளாதாரத்தையும், ஆட்பலத்தினையும் திசை திருப்பியது. சிறிய படைகொண்டு அதிக தாக்குதல் வாய்ப்புக்களை உருவாக்கி, பெரிய எண்ணிக்கையிலான எதிரிப்படைகளை முடக்கிய ஒரே படை கருப்புலிப்படைதான்.

இதுபோலத்தான் புலிகள் இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து ஒவ்வொரு படையணி உருவாக்கத்திற்கும் பின்புலத்தில் வாய்ப்புகளின் எண்ணிக்கையும், சிக்கனமும் காரணமாக இருக்கும். இவ்வாறு கீழிருந்து ஒவ்வொரு அடியிலும் சிக்கனத்தை மையமாக வைத்து புலிகள் இயக்கம் கட்டி எழுப்பப்பட்டது. அதனால்தான் அவர்கள் குறைந்த ஆற்றலில் பலமடங்கு ஆற்றலுள்ள எதிரியை பலமுறை தோற்கடித்து உலகை வியக்கவைக்க முடிந்தது.

5. புலிகள் இயக்கம் புதுமைகளைப் படைத்த இயக்கம். உலக இராணுவங்கள் பயன்படுத்திய நியூட்டன் சட்டக வியூகங்களை உடைத்து, புதிய சட்டகத்தை உருவாக்கி, இந்திய -இலங்கை இராணுவங்களைப் பலமுறை தோற்கடித்தார்கள். யாரும் நம்பவே முடியாத திட்டங்களையும், உத்திகளையும் வகுத்தார்கள்.

அவர்கள் இராணுவ உத்திகளைப் பற்றிய அறிவில் முன்னோடிகளாக இருந்தார்கள். அறிவுதான் சிக்கனத்திற்கே அடிப்படையானது. எந்த உத்தி சிறப்பானது? என்ற அறிவு இல்லாவிட்டால், அவர்களால் இவ்வளவு வெற்றிகளை அடைந்திருக்க முடியாது. அவர்களின் கப்பற்படைப் படகுகளை அவர்களே வடிவமைத்தார்கள், பல இராணுவ தளபாடங்களையும் அவர்களே படைத்தார்கள்.

சிறிய எளிமையான விமானங்களை எடுத்து, குண்டெறியும் விமானங்களாக மாற்றி வடிவமைத்தார்கள் . இதெல்லாம் அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கும், சிக்கனத்திற்கும் உதாரணங்கள். நமக்குத் தெரியாதது எத்தனையோ?.

மொத்தத்தில் புலிகள் இருக்கும் பொருளாதாரத்தையும், ஆட்பலத்தையும் வைத்து சிக்கனமாக ஒவ்வொரு காய்களாக உருவாக்கி, அவற்றை இணைத்து வாய்ப்புகளைப் பெருக்கி, ஒவ்வொரு அடியாக முன்னேறினார்கள். இதுதான் இன்றைய சிக்கல் அமைப்புகள் பற்றிய ஆராய்ச்சிகள் கூறும் .வெற்றிக்கான பாதை . அதைப் புலிகள் ஆரம்ப காலத்திலிருந்தே பின்பற்றி வந்தார்கள்.

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவல்லரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.

தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்

nfo@nsjewellery.com

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52



StaR-Impex

Aachi®
The Mother of Good Taste

ஜெர்மன் நகரின்
ஆச்சி மசாலாவின்
மொத்த விநியோகஸ்தர்

Lebensmittel Grosshandel e.K.
Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net








சண் தவராஜா

# தேவை சிந்தனையில் மாற்றம்…?

இளவேனிற் காலம் முடிந்து கோடை காலம் ஆரம்பமாக இருக்கிறது. கோடை காலத்தின் வருகையுடன் கொண்டாட்டங்களும் ஆரம்பமாவது வழக்கம். திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், ஆலய உற்சவங்கள் என தமிழ் மக்கள் கூடிக் கொண்டாடுவதை அவதானிக்க முடியும். அது தவிர சுற்றுலாவும் தொடங்கி விடும்.

வெப்பமான காலநிலையில், பூங்காக்கள், ஏரிக் கரைகள், வனங்கள் என மக்கள் கூடிக் களிக்கும் சிறுசிறு நிகழ்வுகளும் ஆரம்பமாகிவிடும். இன்றைய காலம் கொள்ளைநோய்க் காலமாக இருந்தாலும், அது தொடர்பான கவலை அற்றவர்களாகவே புலம்பெயர் தமிழ் மக்களில் அநேகர் நடந்து கொள்வதைக் காண முடிந்தது. ஒரு வருடத்தைக் கடந்தும் கொள்ளைநோய் அபாயம் நீங்கிவிடாத போதும், அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுவிடாதவர்களாகவே பெரும்பாலான தமிழ் மக்களைக் காண முடிகின்றது.

சுவிஸ் நாட்டைப் பொறுத்தவரை 2020 பெப்ரவரி மாதம் கொரோனா அறிகுறிகள் தென்படத் தொடங்கிய காலத்தை விடவும், இரண்டாவது அலை என வர்ணிக்கப்பட்ட ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே தமிழ் மக்களில் பெரும்பாலானாவர்கள் நோய்த் தொற்றுக்கு ஆளாகி இருந்தனர். நோய்த் தொற்று தொடர்பான விழிப்புணர்வுப் பரப்புரைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும் - வழக்கம் போன்றே - அவற்றைச் செவிமடுக்கத் தவறிய தமிழ் மக்கள், அல்லது மிகச் சரியாகச் சொல்வதானால், அவற்றை அலட்சியம் செய்த தமிழ் மக்கள் பெருவாரியான நோய்த் தொற்றுக்கு ஆளாகியதைப் பார்க்க முடிந்தது.

தமிழ் மக்கள் மத்தியில் பொதுவில் நிலவும் மூட நம்பிக்கைகள் இத்தகைய நிலைக்கான பிரதானக் காரணமாகக்



கருதப்பட்டாலும், சமூக ஊடகங்களின் அதீத வளர்ச்சி காரணமாக அவை தாங்கிவரும் கருத்துகளைக் கேள்விகள் எதுவுமின்றி நம்பும் போக்கையும் துணைக் காரணமாகக் கொள்ள முடியும். அரசாங்கம் அறிவிக்கும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறும் இவர்கள், மறைமுகமாக மற்றவர்களையும் அவ்வாறு விதிமுறைகளை அலட்சியம் செய்யவும் தூண்டி வருகின்றனர். விதிமுறைகளைப் புறந்தள்ளி அதிக எண்ணிக்கையில் ஓரிடத்தில் கூடுவது, முகக் கவசம் அணிவதைத் தவிர்ப்பது, வாயையும், மூக்கையும் மூடுவதற்குப் பதிலாக முகக் கவசத்தைத் தாடையில் இழுத்துவிட்டுக் கொண்டு அலைவது, ஒருவரை ஒருவர் கட்டித் தழுவுவது, தனி மனித இடைவெளியைக் கடைப்பிடிக்கத் தவறுவது என நோய்ப் பரவலுக்கு ஏதுவான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அனைத்துக்கும் மேலாக, ஒருவருக்குக் கொரோனாக் கொள்ளைநோய்த் தொற்று ஏற்பட்டு விட்டதென்றால் தாம் பழகியவர்களுக்கு, தம்மோடு தொடர்பில் இருந்தவர்களுக்கு தொற்று தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து அவர்களை எச்சரிக்கும் சமூகப் பொறுப்பில் இருந்தும் பெரும்பாலானோர் தவறி விடுகின்றனர். கொள்ளைநோய்த் தொற்றுக்கு ஆளாகிவிட்டோம் என்பதை மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைத்து விடுவதற்கு இவர்கள் படும்பாட்டைச் சொல்லிமாளாது.

இன்றுவரை, தடுப்பூசி ஒன்றே கொள்ளைநோயில் இருந்து தப்புவதற்கான மார்க்கமாக இருக்கையில், தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தும் அதனைத் தவிர்த்துக் கொள்வதுடன், அவ்வாறு தடுப்பூசி ஏற்றிக் கொள்ள விரும்புவர்களையும் அச்சமூட்டி, அவர்களைத் தடுத்தும் வருகின்றனர். உலகெங்கும் தடுப்பூசி ஏற்றிக் கொண்ட கோடிக்கணக்கான நபர்கள் எதுவித பிரச்சனையும் இன்றி வாழ்ந்துவரும் நிலையில், தடுப்பூசி ஏற்றிக் கொண்ட வெகு சொற்பமானோர் - வெவ்வேறு காரணங்களால் - மரணத்தைத் தழுவிக் கொண்ட செய்திகளைத் திரட்டி அவற்றைப் பூதாகரமாக்கி வருகின்றனர்.

அறிவியலில் மானுடம் குலம் கண்டுள்ள அதீத வளர்ச்சியின் சகல அம்சங்களையும் அனுபவித்துக் கொண்டே அறிவியலுக்குப் புறம்பான விடயங்களைப் பரப்புவதில் புலம்பெயர் தமிழ் மக்களில் கணிசமானோர் எடுத்துக் கொள்ளும் அக்கறையைப் பார்த்து அழுவதா? சிரிப்பதா? எனத் தெரியவில்லை. அத்தகையோர் தாம் சார்ந்து வாழும் சமூகத்தில் தமது கருத்துகளைப் பரப்புவதோடு மாத்திரம் நின்றுவிடாது,



தாயகத்தில் வாழும் தமது உறவுகளிடத்திலும் தமது கருத்துகளைக் காவிச் செல்வதைப் பார்க்க முடிகின்றது.

தாயகத்தில் வாழும் சொந்தங்களுக்குப் பொருளாதார உதவிகளைச் செய்கிறோம் என்பதற்காக, அங்கு வாழும் மக்கள் எதனை உண்ண வேண்டும்? எதனை உடுத்த வேண்டும்? தேர்தல்களில் யாருக்கு வாக்களிக்க வேண்டும்? எனப் பல்வேறு அறிவுரை(?)களை அள்ளிவீசி வரும் நிலையில், புதிதாகக் கொரோனாக் கொள்ளைநோய் தொடர்பான அறிவுரைகளையும் அளவுக்கு அதிகமாகக் கூறிவருவதை அவதானிக்க முடிகின்றது. “கொரோனாத் தொற்று ஏற்படாமல் இருக்க ரசம் குடிக்க வேண்டும் என்பதில் இருந்து தடுப்பூசி என்பது வேலைக்கு ஆகாதது” என்பது வரை இவர்களின் அறிவுரைகள் லங்கா புவத் செய்திச் சேவையையே முறியடிக்கும் விதத்தில் செயற்படுவதைக் காண முடிகின்றது.

புலம்பெயர் தமிழர்களின் இத்தகைய அறிவுரை(?)களைக் கேட்டதன் விளைவுதானோ என்னவோ, தற்போது தாயகத்தில் தமிழ்ப் பிரதேசங்களிலேயே கொரோனாவின் தொற்று வீதம் அதிகமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. கடந்த வருட ஆரம்பத்தில் தொற்று வீதம், மரண வீதம் என்பவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த ஒட்டு மொத்த இலங்கைத் தீவும், குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களும் தற்போது தொற்று மற்றும் மரண எண்ணிக்கையில் முன்னிலை வகிப்பதைப் பார்க்க முடிகின்றது.

இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் இலங்கை தொடர்பான புள்ளி விபரங்களின் படி 3,268 பேர் கொரோனாக் கொள்ளை நோய்க்குப் பலியாகி இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. தினமும் 30 முதல் 35 வரையானோர் கொரோனாவால் உயிரிழந்து கொண்டிருக்கின்றனர். இதில் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்களும் அடக்கம். இலங்கையைப் போன்ற நாடுகளில் மருத்துவமனைக்கு வராமல் மரணத்தைத் தழுவியவர்களை, உறவினர்களே அடக்கம் செய்யும் வழக்கம் உள்ளதால் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களை விடவும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் மரணத்தைத் தழுவி இருக்கலாம் என்றே கருத இடமுண்டு.

இது தவிர, அரசாங்கம் அறிவித்துள்ள கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காமல் சட்டத்தின் பிடியில் சிக்கியிருப்போரின் எண்ணிக்கையும் 50 ஆயிரத்தை நெருங்குவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார்கள், திருமண நிகழ்வில் பங்கெடுத்தார்கள், மரண வீடுகளில் ஒன்று கூடினார்கள், காரணமின்றித் தெருவில் அலைந்தார்கள் என்ற காரணங்களாலேயே இவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒன்றுகூடுவதன் ஊடாகத் தங்களையும், தாம் நேசிக்கும் தமது குடும்பத்தினரையும், ஒட்டுமொத்த சமூகத்தையும் ஆபத்துக்கு ஆளாக்குகிறோம் என்பதைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை.

‘தலைவன் எவ்வழியோ, குடிகளும் அவ்வழி’ என ஒரு சொலவடை உள்ளமை நாம் அறிந்ததே. ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களை வழிநடத்தக் கூடிய ஆகர்சமிக்க ஒரு தலைமை இல்லாத நிலையே உள்ளது. அந்த வெற்றிடம் குறுகிய காலத்தில் நிரப்பப்படக் கூடிய அறிகுறிகளையும் காண முடியவில்லை. மக்களை வழிநடத்தும் பொறுப்புமிக்க அரசியல் தலைமைகளும் தங்களுக்குள் பிளவுண்ட நிலையிலேயே உள்ளன. சமூகத்தில் பொறுப்பானவர்களாகக் கருதப்படக் கூடிய புத்திஜீவிகளும் சமூக அக்கறை அற்ற, சுயநலப் போக்குக் கொண்டவர்களாகவே அதிகம் உள்ளனர். ஊடகங்களையும், ஊடகர்களையும் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. சமூக ஊடகங்கள் மலிந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில் முன்னோடிகளை ஒதுக்கி வைப்பது ஒருபுறமிருக்க, ‘தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்’ என்ற நிலையே காணப்படுகின்றது.

மக்கள் மனதிலும், மக்களை வழிநடத்தும் பொறுப்பில் உள்ளவர்கள் சிந்தனையிலும் மாற்றம் வந்தாலன்றி இன்றைய போக்கில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்பதே யதார்த்தம். மாற்றங்கள் எப்போதும் தாமாகவே உருவாகுவதில்லை. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் பூனைக்கு மணிகட்டுவது யார்? என்பதே மிகப் பெறுமதியான கேள்வி?



வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
19ஆம் ஆண்டில்....
மாபெரும் ராஜ முத்திரை
யாரும் கண்டிராத மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
SK
SINCE 2003
S.K. Silks & Gold Paradise
சிறப்பு அதிரடித் தள்ளுபடி விற்பனை
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

# உள்ளம்

## திறக்கும் உண்மைகள்

> "உளம் திறக்கும் உண்மைகள்…" என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.



### தேவை...

விளக்கிற்கு
வெளிச்சம் தர
மட்டும் தான்
தெரியும், தேவை
எங்கு என்பதை நாம்
தான் தீர்மானிக்க
வேண்டும்...!


### காதல்...

என் மனதை
பிளந்து
உன் உயிர்
விழுந்து
நசுங்கிய
காட்டில்
இருளை
அகற்றி விட்டு
பகல்
முளைத்திருக்குமா?
என தேடுகிறது
நம் காதல்...!

### பணம் குணம்

ஏமாற்றி பிழைப்பவன்
ஏகோபித்து வாழ்கிறான்.
ஏமாற்றப் பட்டவன்
ஏக்கத்தில் தவிக்கின்றான்.
பணம், பொருள், இன்பம்
பக்கத்தில் இருக்க,
குணம், நீதி, நேர்மை
குட்டைக்குள் போய் விட்டதே!.

▶ கெங்கா ஸ்டான்லி



நிகர லாபம் எதுவுமின்றி
முதலீடு செய்கிறேன்

நீ அளவின்றி
அள்ளித்தருகிறாய்

மனப்பை முழுவதும்
நிரப்பி விடுகிறேன்

நீ காற்றை விட லேசாக
கையில் தவழ்கிறாய்

அதிகமுமில்லை குறைவுமில்லை
அன்பைப் பொழிவதில்

பதுக்கல் எதுவுமின்றி
பாதுகாக்கிறேன்

விலை வைக்க முடியாமல்
குவித்து வைத்துள்ளேன்

மழை வரும் போல் இருக்கிறது
வா பருகி மகிழ்வோம்
பருவத்தேநீரை

▶ நந்தவனம் சந்திரசேகரன்




**நான்...**

உலகின்
உச்சியில் இருப்பது போல்
உணர்ந்து கொள்
மகிழ்ச்சி

உலகம்
உன் தலையில்
இருப்பதாக நினைப்பது
துயரம்

**விட்டுவிடு...**

நீ எங்கு சென்றாலும்
அங்கு
துயரத்துடன் இருப்பாய்
காரணம்
அங்கு தான் இன்னமும்
நீ நின்று கொண்டிருக்கிறாய்

**இலகுவாய்...**

கூறுவதற்கு
உன்னிடம்
எதுவும் இல்லாத போது
காதுகொடுத்து கேட்பாய்
சுமையற்ற மனமே
ஏற்றுக்கொள்ள
தயாராகும்...

**மாற்று...**

இடத்திற்கேற்ப
மனத்தை மாற்று
மாமரத்தின் கீழ் நின்று
ஆப்பிள் பழம் கேட்காதே...

**பாமினி பேர்லின்**

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?**

**நோய் நோய் எண்டு புரளியைக் கிளப்பி கண்டுபிடிச்ச மருந்தெல்லாம் மனிசரில குத்தித் தள்ளிப்போட்டங்கள் கண்டியளோ. இனி என்னென்ன நடக்குமோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இல்லை இல்லை ஆண்டவனுக்கும் சில நேரங்களில இருட்டுத்தான் கண்டியளோ. அவரின்ர பெயரிலே நடக்குற அக்கிரமங்களைக் கண்டுபிடிக்கவே ஆண்டவனுக்கு நேரம் இல்லை. உதில எங்க மனிசருக்கு நடக்கிற அக்கிரமங்களை உவர் கண்டுபிடிக்கப்போறார் எண்டு தெரியேல்லை.**

எல்லா இடங்களிலையும் அவர் கையைத் தூக்கிக்கொண்டு தான் இருக்கிறார். "ஆளை விடுங்கோடா மனிசரே..." எண்டு மறைமுகமா சொல்லுறதுக்குத் தான் கையைத் தூக்கிக்கொண்டு இருக்கிறாரோ எண்டும் நான் யோசிக்கிறனான் பாருங்கோ.

விசயம் என்னெண்டா பாருங்கோ; உங்கின ஒரு இடத்தில ஏற்கனவே இருந்த கோயிலைப் புதுசா கட்டுறதுக்கு திட்டம் போட்டவை கண்டியளோ. வெளிநாட்டில இருக்கிற எங்கட சனம் கோயில் எண்டா அள்ளிக்கொடுக்கிறது வழமைதானே. அதேமாதிரி சனம் தலைக்கு ஆயிரம், ஐநூறு எண்டு அள்ளிக்கொடுத்தது பாருங்கோ.

ஆனால், கோயில் கட்டுறம் எண்ட பெயரிலே, கோயில் டலீவர் முழுக்காசையும் கோப்பித்தூள் போல அரைச்சுப்போட்டார் கண்டியளோ. அவர் ஆருக்குத் தேத்தண்ணி போட அரைச்சார், எதுக்காக மறைச்சுவைச்சு அரைச்சார் எண்டு என்ர நண்பர் ஒருத்தர் கோப்பித்தூள் காரனின்ர விலா எலும்பை எண்ணிப்பார்த்து கேட்டிருக்கிறார். ஆனால் அதுக்கும் பதில் இல்லையாம். ஊர்ச்சனத்தின்ர காசை வாங்கி, தன்ர குடும்பத்துக்கு கோப்பி அரைச்சவருக்கு எதிராக இப்ப முழுச்சனமும் கிளம்பி நிக்குது கண்டியளோ.

இதுக்கு முதல் பாருங்கோ, அங்க ஏற்கனவே இருக்கிற கோயிலை பெரிசா கட்டவேணும் எண்டு திட்டம் போட்டதே பொதுமக்கள் தான் கண்டியளோ. ஆனால் கோப்பித்தூள் முதலாளி ஏற்கனவே ஒரு கில்லாடி திட்டம் போட்டுவைச்சிருந்தது பொதுசனத்துக்குத் தெரியாது பாருங்கோ.

கோயில் நிர்வாகத்துக்குள்ள ஏற்கனவே இருந்த சனத்துக்குள்ள, தன்னுடைய ஊர்க்காரர் தவிர்ந்த யாருக்கும் அவர் எதுவும் சொல்லுறதில்லை கண்டியளோ. கோயிலைப் புதுசாக்கட்டத் திட்டம் போட்ட நாள் தொடங்கி, இண்டைக்கு வரைக்கும் அதுக்குள்ளே முதலாளி போட்ட திட்டம் ஒண்டும் அவரைத்தவிர வெளியாக்களுக்குத் தெரியாது பாருங்கோ.

நிர்வாக சபைக்குள்ள இருந்த தன்ர ஊர்க்காரரை கைக்குள்ள போட்டுக்கொண்டு, கோயில் கட்டுற வேலையை ஆரம்பிச்ச முதலாளி, ஆரம்பத்தில கோயில் கணக்கு வழக்குகளைப் பொதுமக்களுக்குக் காட்டுறதைத் தவிர்த்துக்கொண்டார். ஆனால் கோயில் கட்டுப்படுது தானே எண்டு சனமும் பெரிசா அதில அக்கறை எடுக்கேல்லை பாருங்கோ.

கொஞ்ச நாள் போக, கோயிலிலே கர்ப்பக்கிரகம், வசந்தமண்டபம் இரண்டும் அமைக்கப்பட்ட விதம் அங்க இருந்த இளம்பெடியளுக்கு குழப்பமாகத் தெரிஞ்சிருக்கு. எல்லாரையும் முட்டாள் எண்டு நினைச்சது தான் கோப்பித்தூள் முதலாளி செய்த மகாதவறு. ஆனால் கோயில்களுக்கு அடிக்கடி போய் வாற இளம்பெடியளுக்கு ஒரு அளவுக்கு மேல சுத்தமுடியாது எண்டது முதலாளிக்கு விளங்கேல்லை பாருங்கோ

இதில உள்ள இன்னொரு திருகுதாளம் என்னவெண்டா பாருங்கோ, கோயிலோட சேர்த்து ஒரு விழா மண்டபமும் கட்டப்பட்டிருக்கு. அந்த விழா மண்டபம் தொடர்பான விளக்கமான அறிக்கை எதுவும், நிதிவழங்கிய யாருக்கும் கொடுக்கப்படேல்லை.

அதோட, கோயிலுக்கு அருகிலேயே இருக்கிற விழா மண்டபத்திலே விழாக்களுக்கு ஏற்ப மாமிச உணவுகளும் சமைக்கப்படும் எண்டு சொன்னது மட்டுமில்லாமல், மாமிசம் சமைச்சு முடிய மஞ்சள் தண்ணியைத் தெளிச்சு விட்டா, குற்றம் குறையெல்லாம் போயிரும் எண்டுவேற கதைவிட்டிருக்கிறார் முதலாளி.

இப்பதான் சனத்துக்கு இன்னொரு விசயமும் புலப்பட ஆரம்பிச்சிருக்கு. 2009 இற்குப் பிறகும், இயக்கத்தின்ர பெயரைச் சொல்லி வாழக்கை நடாத்துற வெள்ளைச்சட்டை வீரர்கள் அமைப்பிலயும் கோப்பித்தூள் முதலாளி அங்கம்



வகிக்கிறதால, அவையின்ர எடுபிடி விழாக்களுக்கெல்லாம் இடம் அமைத்துக்கொடுத்து தன்னை ஒரு பொறுப்புள்ள அதிகாரியாக நிலைநாட்ட கோப்பித்தூள் முதலாளி முயற்சி செய்யுறார் எண்டதும் வெளியில வந்திட்டுது பாருங்கோ.

ஏனெண்டால், பத்தைக்குள்ள நிண்ட நாயை விரட்ட கல்லெறியேக்க, அதுக்க நிண்ட முயலும் சேர்ந்து வெளியில வந்தமாதிரி, கோயில் பிரச்சனைக்குள்ள தலையிட வெள்ளைச் சட்டை வீரர்கள் அமைப்பின் தளபதியும், சிரிப்புச் சிங்காரவேலருமாகிய தளபதி ஐநூறு மைல் தொலைவில இருந்து இஞ்ச வந்திருக்கிறார்.

அதுமட்டுமில்லாமல்; கோயில் கட்டப் படுவதில் நடைபெறும் தில்லுமுல்லு தொடர்பாக நகரசபை மேலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்த பெண் பிள்ளைக்கு மிரட்டுற தொனியில தொலைபேசியூடாக செருமியிருக்கிறார் தளபதி. இஞ்ச பிறந்த பிள்ளை சும்மா விடுமே. அது விசயத்தை வெளியில கொண்டுவந்திட்டுது கண்டியளோ.

கோயில் கட்டுறதில இருக்குற சிக்கல்களையும், நிதி அறிக்கைகளையும் பொதுவில வெளியிடவேணும் எண்டு கேட்ட அத்தனை நபர்களையும், நிர்வாகத்தில் இருந்து யாருக்கும் தெரியாமல் தூக்கியிருக்கிறார் கோப்பித்தூள் முதலாளி.

அதுமட்டுமில்லாமல், ஏற்கனவே அங்கத்துவப்பணம் செலுத்திக் கொண்டிருந்த பலரது அங்கத்துவத்தை நீக்கி, அவையின்ர பணத்தையும் திருப்பி அனுப்பியிருக்கிறார் எண்டா ஆளுக்கு எவ்வளவு கொழுப்பு எண்டு பாருங்கோவன். நிம்மதியையும் அமைதியையும் தேடி வாற மக்களுக்கு அருள் வழங்குற இடமாக இருக்க வேண்டிய கோயில், அக்கிரமங்களின் அடையாள நிலையமாக மாறியிருக்கு பாருங்கோ.

அதோட இந்தவிடயங்கள் தொடர்பாக குரல்கொடுத்து வந்த இளைஞர்கள் யாரையும் கோயிலுக்குள்ளே அனுமதிக்கக்கூடாது எண்டு வேற சொல்லியிருக்கிறார் கோப்பித்தூள் முதலாளி. அப்படி கோயிலுக்குள்ளே போன ஒருவரையும், காவல்துறையை அழைச்சு வலுக்கட்டாயமாக வெளியில அனுப்பி, நீதியை நிலைநாட்டினாராம் முதலாளி.

புதிதாக ஒரு நிர்வாக சபையைக் கூட்டி, அதுக்குள்ளே தனக்கு சிங்சக் போடுற ஆக்களாய்ப் பார்த்து பொறுப்புகளில போட்டு, அதிகாரத்தை நிலை நாட்டின முதலாளிக்கு எதிராக அண்மையில கண்டன ஊர்வலமும் அந்த நகரத்திலே நடந்ததாம் பாருங்கோ. ஏராளமான இளைஞர்களும், பொதுமக்களும் சேர்ந்து அந்த இடத்தில கூடி தங்கட கண்டணத்தைத் தெரிவிச்சவை பாருங்கோ.



ஆனால்; அதிகாரத்தைக் கையில எடுத்து வைச்சுக்கொண்டு தலைகீழா ஆடுற முதலாளிக்கு தான் செய்வதெல்லாம் சரி, சொல்வதெல்லாம் உண்மை எண்ட எண்ணம் தவிர வேற எதுவும் இல்லை.

வாழுற ஊரில நடக்கிற நற்பணிக்காக சனம் குடுத்த காசை பைக்குள்ள போட்டுக்கொண்டு, தாங்கள் நினைச்சபடி ஆடுற கூத்தெல்லாம் வெளியில தெரியவராது எண்டு நினைச்ச ஆட்களுக்கு இளம் சமுதாயமும் பொதுமக்களும் சேர்ந்து சம்மட்டி அடி போட்டிருக்கினம் பாருங்கோ. அதுவும், கணக்கு வழக்கு காட்டாத கூட்டமெல்லாம் முதலாளிக்கு பின்புலமாக நிக்குறதை பார்த்தால், கள்ளனுக்கு கள்ளன் தான் துணை எண்டது உண்மை தான் போலிருக்கு.

இதுவே 2009 க்கு முதலாக இருந்திருந்தால், ஆளுக்கு மொட்டையடிச்சு, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதையில ஏத்தி நகர்வலம் கொண்டுபோயிருக்கலாம். தலைவன் இல்லாத மந்தைகளாக தமிழர்கள் ஆனதால், கண்டவன் நிண்டவனெல்லாம் தமிழரை மேய்க்கிற காலம் வந்திட்டுது பாருங்கோ. இதுக்கு காலம் தான் பதில்சொல்லவேணும் கண்டியளோ.

நிலை மாறினால்
குணம் மாறுவான் பொய்
நீதியும் நேர்மையும் பேசுவான்
தினம் ஜாதியும் பேதமும்
கூறுவான் அது வேதன்
விதி என்றோதுவான்
மனிதன் மாறிவிட்டான்
மதத்தில் ஏறிவிட்டான்

**அப்ப வரட்டே**




# SWISS OFTRINGEN

மாநகரில்

பிரமாண்டமான

# OPENING


Importas Cash & Carry

# IMPORTAS CENTER

**எம்முடன் இணைந்து கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள வியாபாரிகள் தேவை...**

**200+**

**பார்க்கிங் வசதியுடன்**



**Textile, Saloon,**
தங்க நகைக் கடை ஆகியவற்றுக்கு போதுமான இடவசதியுள்ளது.

**Highway** இலிருந்து
**700m** தூரம் மட்டுமே!

**400m²** இல்
**Importas Cash & Carry**
அமையவுள்ளது.

**உங்கள் வியாபாரத்தை அமைப்பதற்கான இடவசதியுள்ளது.**

மேலதிக கடைகளை அமைக்க விரும்பினாலும் தொடர்பு கொள்ளவும்.

+41 78 883 21 99 | info@globalstoreag.ch | Importas Oftringen

# குற்றவாளிகளிற்கே மன்னிப்பு அரசியல் கைதிகளிற்கல்ல!

**த.பாவலன்**



“ஒருசிலரை விடுவிக்கப் போகின்றார்களென்ற பேச்சு கடந்த சில மாதங்களாக இருந்தே வந்தது. ஆனால், யாரை விடுவிக்கப்போகின்றார்கள்? என்பது கேள்வியாக இருந்தது. ஒவ்வொரு சிறையிலிருந்தும் கைதிகள் விபரங்கள் பெறப்பட்டமையால் பரபரப்பு தொற்றியிருந்தது” என்கிறார் தன்னை அடையாளப்படுத்த விரும்பாத, இன்னமும் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதி ஒருவர்.

சிறைகளிற்குள் கைத்தொலைபேசிகள் இல்லையென்பது வெளியே சொல்லப்படுகின்றது. ஆனாலும் கைதிகளிற்கு நிமிடத்திற்கு பேச இவ்வளவென தொலைபேசியை வாடகைக்கு விட சிறைக் காவலர்கள் பலரிருந்தனர். அதனால் கல்லாகட்டி, மாடி வீடு கட்டியவர்களும் உண்டென்கிறார் அவர்.

உண்மையில் தற்போது இலங்கை சிறைகளில் மூன்று வகையினராக அரசியல் கைதிகளுள்ளனர். தண்டனை பெற்ற முன்னாள் போராளிகள், ஆதரவாளர்கள் ஒரு வகையினர். இன்னொரு வகையினர் வழக்கு நிலுவையிலுள்ளவர்கள். இவர்களைத் தாண்டி விடுதலைப்புலிகள் மீள் உருவாக்கக் குற்றச்சாட்டில் இறுதி யுத்தத்தின் பின்னராக கைதானவர்கள். அவர்கள் எண்ணிக்கை தெரியாவிடினும் கடந்த வாரம் வரை அத்தகைய கைதுகள் நடந்தேயிருந்தது.

விடுவிக்கப்படப் போகின்றவர்கள் தொடர்பில், பரபரப்பு சிறைகளில் தொற்றிக்கொண்டிருந்த நிலையில் 16 பேர் அனுராதபுரத்திலிருந்து தனியே வெளியே அழைக்கப்பட்டிருந்தனர். இலங்கை ஜனாதிபதி உங்களைச் சந்திக்கவுள்ளார் என சிறை அதிகாரிகள் விளக்கமளித்தனர். இல்லை அவ்வாறு சொல்லி என்கவுண்டரில் போடப் போகின்றார்கள் என்ற அச்சமும் இருந்தது.

கொழும்பு நோக்கியப் பயணம் பலரிடையே அச்சத்தையும், சந்தேகத்தையும் தந்தது. அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட பலரும் அடுத்துவரும் ஒருசில மாதங்களில் தண்டனை முடிந்து, வீடு செல்லும் கனவிலும் இருந்தவர்களே.

ஆனாலும், ஜனாதிபதி மாளிகையில் கோத்தபாய எட்டிக்கூடப்

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

பார்த்திராத நிலையில், அவரது செயலாளர் என ஒருவர் நீட்டி முழங்கியிருந்தார். புத்தபகவானே நேரில் வந்து மன்னிப்பளிப்பதாக அவர் பிரசங்கம் நடத்திக்கொண்டார். ஊடகங்களிற்கு பேட்டிகள் தரக்கூடாதென நீண்ட நிபந்தனைகளை வாசிக்கப்பட, விடுவிக்கப்படப் போகின்றவர்கள் தாங்களேயென்ற புரிதல் அப்போதே கைதிகளிற்கு ஏற்பட்டிருந்தது.

அதிலும் அரசியல் கைதிகளது விடுதலைக்கான சிறைத் திறப்பை வைத்திருக்கவில்லையென்ற கூட்டமைப்பினர் பற்றியும், அவர் போட்டுத்தாக்கினார். கூட்டமைப்பினரை அரசியல் கைதிகள் பொருட்டாகக் கூட கொள்வதில்லையென்ற போதும், இதுவரை அவர்களால் தான் உங்கள் விடுதலை தடைப்பட்டதென்ற குற்றச்சாட்டு புதிதாகவே இருந்தது.



வடமராட்சியின் முள்ளியில் குப்பை போடும் கிடங்கொன்றை யப்பானிய அரசு கட்டிக் கொடுத்திருந்தது. அதனை திறக்கவும் பட்டத்து இளவரசன் நாமல் ராஜபக்ஸவை வருவித்து துண்டு போட்டுக் கொள்ளவும் முண்டியடித்தார் அங்கயன் இராமநாதன்.

அவுஸ்திரேலிய இறக்குமதியான அமுல்பேபி அங்கயனிற்கு, ஒருபுறம் டக்ளஸ் தேவானந்தாவும், மற்றொருபுறம் கூட்டமைப்பினரும் குடைச்சல் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் புதிய அரசியல் கத்துக்குட்டியான அவர் விடுதலையான அரசியல் கைதிகளிற்கு நாமலைச் சந்திக்க நெருக்கடி கொடுக்க தொடங்கினார்.

பேரரசர் கோத்தபாயவினது உத்தரவைத் தாண்டி, ஊடகங்களிற்கு முகங்கொடுக்க அரசியல் கைதிகள் பின்னடிக்க அதற்காக அடுத்து களமிறக்கப்பட்டவர்களே ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள்.

மரணதண்டனை கைதி துமிந்த சில்வாவை சிறுகுற்றமென மன்னித்து விடுவிக்க முடிந்த பேரரசர் கோத்தபாயவிற்கு, ஆனந்த சுதாகரனின் அந்தரித்து திரியும் பிள்ளைகள் பற்றி கவலையிருந்திருக்கவில்லை. நல்லாட்சியில் ரணிலின் காலிலும், மைத்திரி காலிலும் அரசியல் கைதிகளது பிள்ளைகளைக் காலில் விழ வைத்து அழகு பார்த்தது கூட்டமைப்பு.

அதற்கு கிஞ்சித்தேனும் குறைவார்க்காது இப்போது நாமலின் காலில் ஆனந்தசுதாகரனின் குழந்தைகளை விழ வைத்தார் அங்கயன் இராமநாதன்.

அரசியல் கைதிகளது விடுதலைக்கான நல்லதொரு சந்தர்ப்பம் மைத்திரி -ரணில் நல்லாட்சி காலத்தில் கிட்டிய போதும் தவறவிடப் பட்டிருந்தது. ஆனாலும், நல்லாட்சிக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருந்த கூட்டமைப்பினர் அதற்கு தலையிடி




கொடுக்கக் கூடாதென்ற வகையில் ஐந்து வருடங்கள் திருட்டு மௌனம் சாதித்திருந்தனர்.

ஆனாலும், தற்போது அடிக்கடி உரை உரையாற்றும் எம்.ஏ.சுமந்திரன் நல்லாட்சியில் நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளை விடுவித்திருந்ததாக நாடாளுமன்றில் கூறியிருந்தார்.

எனினும், ஒரு அரசியல் கைதியைக் கூட கூட்டமைப்பினால் விடுவிக்க கூட்டமைப்பு முயற்சிக்க வில்லையென்கிறார் குரலற்றவர்களின் குரல் அமைப்பினைச் சேர்ந்த கோமாகன்.

முன்னாள் அரசியல் கைதியான அவர், சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள சக அரசியல் கைதிகளது விடுதலைக்காக நீண்ட காலமாக போராடி வருபவராவார்.

நல்லாட்சி காலத்தில் அரசியல் கைதிகள் விடுதலையானது உண்மை. ஆனால், அவர்கள் தண்டனை முடிந்தோ அல்லது தமது சொந்த முயற்சியால் பிணை அனுமதி பெற்றோ வெளியே வந்துள்ளனர். இதனைத் தவிர தன்னைக் கொல்ல சதி செய்ததாக எம்.ஏ.சுமந்திரன் உள்ளே தள்ளியவர்கள் கணக்கும் உள்ளதென்கிறார் கோமகன்.

தமிழ் தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள தலைமை வெற்றிடமே உண்மையில் அரசியல் கைதிகளது விடுதலை இழுபட்டு செல்ல காரணமென்பதில் மாற்று கருத்தில்லை.

உண்மையில் சட்டரீதியாக முன்னெடுக்கக் கூடிய நகர்வுகளை வழங்கக் கூட சட்டத்துறை சார்ந்த தமிழ் சட்டத்தரணிகள் பலரும் முன்வராமையும் விடுதலை தாமதத்திற்கு காரணமாகும்.

தமிழ் தேசிய அரசியலில் அப்புக்காத்து அரசியலை மீண்டும் களமிறக்க குத்துக்கரணமடிக்கும் சட்டத்தரணிகள் பலரும், சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளைக் காசு பார்க்கும் மரமாகவே கருதுகின்றனர்.

குடும்ப தலைவர்கள் வருடக்கணக்கில் சிறைகளில் இருக்க, அன்றாட சீவியத்திற்குத் திண்டாடும் கைதிகளது குடும்பங்கள் தாலியை, காணியை அடைவு வைத்து, அப்புக்காத்துமாரிற்கு பணம் கட்ட, அவர்கள் நீதிமன்ற பக்கமே எட்டிப்பார்த்திராத பல கதைகள் உள்ளன.

அனுராதபுரத்திலிருந்து வவுனியாவிற்கு அழைத்து வரப்பட்டு, வருடக்கணக்கில் திகதிகள் ஒத்தி வைக்கப்பட்டு, அலைக்கழிக்கப்படும் சுலக்சன் முதல் பலரது பரிதாபங்கள் வெளியே தெரிவதில்லை. இன்னொருபுறம் சுரேன் இராவகன் போன்றவர்கள் கூறுவது போல, தமது அரசியல் வியாபாரத்திற்கு அரசியல் கைதிகள் மற்றும் குடும்பங்களது அவலங்களை முதலீடாக்கிய கதைகள் பலவுண்டு.

அனுராதபுரத்திலுள்ள சுலக்சன் சகோதரியை தேர்தல் அரசியலிற்கு பயன்படுத்திய தமிழ் தேசிய முன்னணி

தலைவர்கள் நாடாளுமன்றம் சென்றுவிட, பல்கலைக்கழக படிப்பின் பின்னர் கூலி வேலை தேடி அலையும் கதைகளும் தெரிய வருவதில்லை. ஆனாலும், அரசை போன்றே கூட்டமைப்பினை குற்றஞ்சாட்டி அரசியல் செய்வது வழமையாக தொடர்கின்றது.

உலகில் எந்தவொரு நாட்டிலும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர், தண்டனைக் காலம் முடிவடைவதற்கு ஒரு வருடம் இருக்கும் போது அல்லது ஆறுமாதம் இருக்கும் நிலையில், விடுதலை செய்யப்படுவது அறம் சார்ந்த மரபு. அதற்குப் பெயர் பொது மன்னிப்பு அல்ல.

இன்று விடுதலை செய்யப்பட்ட *16* தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவதற்கு இன்னமும் பதினொரு மாதங்களே இருக்கும் நிலையில், பொது மன்னிப்பு என்ற பெயரில் வீடுகளுக்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

வழக்குத் தொடுக்கப்படாமலும் மற்றும் மரண தண்டனை, ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டு இன்னும் பத்து வருடங்கள் அல்லது இருபது வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய கைதிகளை விடுதலை செய்திருந்தால், அதனைப் பொது மன்னிப்பு என்று கூறியிருக்கலாம்.

ஆகவே பொது மன்னிப்பு என்று கூறாமல், அறம் சார்ந்த மரபு அடிப்படையில் குறித்த *16* தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவித்து, மரண தண்டனை அல்லது ஆயுட் தண்டனைக் கைதிகளில் குறைந்தது பத்துப் பேரையாவது தெரிவு செய்து விடுதலை செய்திருந்தால், அதனைப் பொது மன்னிப்பு என்று சொல்லிப் பெருமைப்பட்டிருக்கலாம். நல்லிணக்கம் என்பதில் கொஞ்சமேனும் நம்பிக்கையும் பிறந்திருக்குமென்கிறார் மூத்த ஊடகவியலாளர் நிக்சன்.





அதேவேளை அரசியல் கைதிகளுக்குக் கொடுக்க வேண்டியது விடுதலை. குற்றவாளிகளுக்கே மன்னிப்பு கொடுக்க வேண்டும். தற்போதைய மன்னிப்பில் மகிழ்கின்றவர்கள் அரசியல் கைதிகளைக் குற்றவாளிகளாகப் பார்க்கவே விரும்புகின்றனர். அவர்களும் ஆட்சியாளர்களின் சிந்தனையில் சிக்கியுள்ளனர் என சுலபமாக உண்மையினை போட்டுடைத்துள்ளார் வணபிதா. சக்திவேல் அடிகளார்.


துமிந்த சில்வா எனும் போதை பொருள் மாபியாவை, கோத்தபாயவின் கட்டளையை தலைமேல் கொண்டு கடத்தப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களைக் கொலை செய்து கடலில் வீசிய முகவராக சொல்லப்படுகின்ற நபரை நன்றிக் கடனிற்காக விடுதலை செய்யும் தேவை தெற்கிற்கிருந்திருந்தது.

இந்நிலையில் சிறிய கோட்டை மறைக்க, பெரிய கோட்டினை கீறும் உத்தியே இன்னும் சில மாதங்களில் விடுவிக்கப்படவுள்ள தண்டனை கைதிகளை விடுவித்த நாடகமாகும். இதனை முன்வைத்து புழங்காகிதமடையவோ அல்லது முண்டு கொடுக்கவோ வேண்டிய தேவை தமிழ் சமூகத்திற்கில்லை.

எஞ்சிய அரசியல் கைதிகளது விடுதலையைத் துரிதப்படுத்த அரசியல் ரீதியாக முன்னெடுக்க வேண்டியவை எவை எவை? என்பது பற்றி ஆராய்வதே காலத்தின் தேவை. அதற்குத் தேவை மக்கள் மயப்படுத்தப்பட்ட உண்மையான மக்கள் தலைவர்கள் மட்டுமே!.


Dortmund மாநகரில்....

தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




யேர்மன் மொழி வகுப்புகள்

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு




Nachhilfe வகுப்புகள்

பாடசாலை மாணவர்களுக்கானது



தமிழ் மொழி வகுப்புகள்

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



பரதநாட்டிய வகுப்புகள்

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

Rheinische Str 76-80, 44137 Dortmund

0151 633 633 33, 0231 950 979 00


17 YEARS
Radio - by - Phone
ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி
00 4934 5483411998
தொலைபேசி இலக்கத்தில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60
அழையுங்கள்! வானொலியைத் கேட்டு மகிழுங்கள்..!!
மேலதிக விபரங்களுக்கு... www.etr.fm

பகுதி.36



# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

அவதானி

உளவு நிறுவனங்கள் ஒரு நாட்டினுடைய ஊடகங்களை வாங்கி விடுவது மட்டுமல்ல, பெரும் கோடிக்கணக்கான பணத்தை முதலீடு செய்தும், ஊடகங்களை நடத்தியும் வருகின்றன என்பதை பல நாடுகளில் காண முடிகின்றது. இன்று சீனாவின் ஆதிக்கம் வறிய நாடுகள் மீதும், அரசியல் குழப்பங்கள் உள்ள நாடுகள் மீதும் வெகுவாகக் காலூன்றி உள்ளதை அவதானிக்க முடிகின்றது. சீனாவின் உளவு நிறுவனக் கரம் இலங்கையின் ஊடகங்கள் வரை சென்றுள்ளமையை மறுக்க முடியாது.

ஒரு நாட்டினுடைய பொருளாதாரக் கட்டமைப்பின் ஆரோக்கியமான வலுவால் மட்டுந்தான் அரசியல் நிர்வாகத்தைச் சீரான முறையில் வைத்திருக்க முடியும் என்பது உத்தரவாதமானது அல்ல. அரசியல் குழப்பங்களுக்கான மூல காரணங்களைத் தேடி, அதனை நிவர்த்தி செய்யாமல் விட்டால், அது உளவு நிறுவனங்களுக்கு வாய்ப்பாகவே அமைந்து விடுகின்றன. இன்று சீனாவின் உளவு நிறுவனங்கள் இலங்கையின் அனைத்துப் பகுதிகளையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான அனைத்து வேலைகளையும் திட்டமிட்டுச் செய்து வருகின்றன.

சீனாவின் உளவு நிறுவனங்கள் இலங்கையை அக்கு வேறு ஆணி வேறாக சல்லடை போட்டு ஆய்ந்ததன் பயனாகவே அம்பாந்தோட்டை துறைமுகம் தொடங்கி, மெதுவாக நகர்ந்து போர்ட் நகரம் என தமது நடவடிக்கையை விஸ்தரித்து சீனாவின் ஆக்கிரமிப்பு நீண்டு கொண்டே போகின்றது. இலங்கையைச் சுற்றி பலமான வளையம் உருவாக்கப் பட்டிருப்பதை இன்று இலங்கையர்கள் அனைவருமே உணரத் தொடங்கிய போதும், சீனா கத்தியின்றி இரத்தமின்றி இலங்கை மீது தொடுத்திருக்கும் போரை எவராலுமே தடுத்து நிறுத்த முடியாது.

சிங்கள தமிழ் மக்களைப் பகடைக்

காய்களாகப் பயன்படுத்தி மேற்கொண்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்புக்கு, சீனாவின் உளவு நிறுவனங்களின் தெளிவான தகவல் சேகரிப்பு உதவி இருக்கின்றன.

சீனா என்றவுடன் அது பொதுவுடமைத் தத்துவத்தின் மீது கட்டமைக்கப்பட்ட நாடு என்ற பார்வைக்கு அப்பால், இலங்கை பௌத்த சாசனத்தின் மேல் கட்டியெழுப்பப்பட்ட நாடென்ற வகையிலும், சீன மக்களும் பௌத்த சமயத்தைத் தழுவியவர்களாக இருப்பதும் சீனாவின் ஆக்கிரமிப்புக்கு இலகுப் பாதையை அமைத்திருக்கின்றது.

தமிழர்களுக்கான இனப் பிரச்சினையில் சிங்கள இனத்து வேச அரசியல்வாதிகளும், இலங்கை அரசும் எவ்வாறு அதனைக் கையாளுகின்றது? என்பதை உன்னிப்பாகக் கவனித்து, அதனைச் சீனா கையாளும் அணுகுமுறையை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது.

உலகிலுள்ள வல்லமை பொருந்திய நாடுகள், மற்றைய நாடுகளுக்குள் ஒற்றர்கள் மூலமாக ஊடுருவி, உளவு வேலை பார்த்து தமக்குத் தேவையானவற்றைச் சாதித்து வருகின்றன. சீனாவும் ஆசியாவில் பெரும் வல்லரசு நாடாக வேகமாக வளர்ந்து வருவதை, எந்த நாட்டினராலுமே தடுக்க முயாதென்பதை தடுக்க முயற்சிக்கும் நாடுகளே உணரத் தொடங்கியுள்ளன.

ஒவ்வொரு மனிதனுக்கும் அன்றாட வாழ்விற்கான பல தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவரவர் பொருளாதார நிலைப்பாடு மிக முக்கியமானது. வணிகமே இன்று உலகை ஆட்சி செய்கின்றது. வணிகம் என்பது இன்று ஒரு சர்வாதிகார அணுகுமுறையாக வளர்ந்து விட்டது. உலகில் உள்ள மனிதர்களில் எண்பத்தைந்து வீதமானவர்கள் நடுத்தர வருவாயுள்ள மனிதர்களே!.

அத்தகு வருவாயைக் கொண்டவர்களின் வாழ்விற்குத் தேவையானவற்றை மிக மலிவான விலையில் தனது ஏற்றுமதி மூலம் இறக்குமதி செய்து கொண்ட நாட்டை, தனது பார்வைக்குள் சீனா கொண்டு வந்துவிட்டது. சீனாவின் உற்பத்திகளைப் பணக்கார நாடுகள் தொடங்கி, ஏழை நாடுகள் வரை இறக்குமதி செய்து வருகின்றன.

இலங்கையைச் சீனா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான திட்டமிடல் பல ஆண்டுகளுக்கு முன்னரே நடைபெற்று விட்டது என்பதை நிராகரிக்க முடியாது. சீனா மற்றைய வல்லரசு நாடுகளைப் போல போர் முரசம் கொட்டி, ஒரு நாட்டிற்குள் நுழைவதில்லை. பல ஆண்டுகளாகத் தொடரப் போகின்ற அல்லது சுவீகரிக்கப் போகின்ற தனது திட்டத்தைத் தெளிவாக வைத்துக் கொண்டு, சிரித்த முகத்துடன் நுழைந்து, ஆட்சியாளர்களுடன் கைகுலுக்கும். தனது உளவு நிறுவனங்கள் மூலம் இலங்கையின் நிலவரத்தை மிகத் தெளிவாக அறிந்து கொள்வதில் இலங்கையில் இருக்கும் சீனத் தூதரகம் முழு வேலைத் திட்டத்தைச் செய்து வருவதை மறுக்கவே முடியாது.



# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்

StaR-Impex




Rabeena Since 1986 We've Mastered Taste

Aachi The Mother of Good Taste

BTM

Double Horse

Bringing Health to Life

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

TRS ASIA'S FINEST FOODS




MDH · Laziza International · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru Brand · AROY-D · MTR · Aashirvaad · Pillsbury · Patak's Original · Laila



உளவு நிறுவனங்கள் ஒரு நாட்டிற்குள் நுழைந்து, தனது திட்டத்தில் வெற்றிபெற வேண்டுமெனில் அங்குள்ள மக்களின் இனம், மொழி, மதம் சம்பந்தப்பட்ட விடயங்களில் மக்களிடம் காணப்படும் நம்பிக்கை சாதாரணமாக இருக்கின்றதா? அல்லது அதீதமா இருக்கின்றதா? இனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டிருக்கின்றனவா? என்பதைக் கண்டறிவதிலேதான் அதிக கவனம் செலுத்தும்.

இலங்கையில் இன, மொழி, மத வேறுபாடுகளால் அது சார்ந்த அரசியல்வாதிகளாலும், அவர்களின் உரை வெளிப்பாடுகளாலும் முரண்பாடுகளைத் தோற்றுவித்து வருகின்றனர். அதுவும் இலங்கையைச் சீனா தனது கைக்குள் போட்டுக் கொள்வதற்குக் காரணமாகும்.

இன்னொரு நாட்டை தனது ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வரவேண்டுமெனில், பக்கத்து நாட்டை தனது நட்பு நாடாக மாற்றுதல் என்பதில் இந்தியாவை தனது எதிரியாகக் கருதும் சீனா, இலங்கையைத் தனது தளமாக பாவிக்கத் தொடங்கி விட்டது.

இலங்கையின் மண் சார்ந்த வளங்கள் மட்டுமல்ல, கடல் சார்ந்த வளங்களையும் சீனா தன்வசப்படுத்தத் தொடங்கியுள்ளது. இன்னொரு நாட்டின் ஆளுமையை தேசியவாதிகள் எப்பொழுதுமே விரும்ப மாட்டார்கள்.

அந்த எதிர்ப்பை நீர்த்துப் போகச் செய்வதற்காக இலங்கையில் பல்வேறு அபிவிருத்திகளைச் செய்வதிலும் கடன்களை வழங்குவதோடு நின்றுவிடாது, அரசியல்வாதிகள் மூலம் ஊடகங்களில் சீனச் சார்புநிலை அறிக்கைகளை வெளியிடச் செய்தும் வருகின்றது. பொதுவாக இலங்கை ஊடகங்களின் ஆசிரியர் தலையங்கங்களைப் பார்க்கின்ற போது, சீனாவின் ஆளுமை இலங்கையில் ஏற்பட்டிருக்கின்றது என்பதை ஆணித்தரமாக குறிப்பிடவேயில்லை.

ஆங்காங்கே காணப்படும் எதிர்ப்புகளை மக்களின் அபிப்பராயம் என்ற ரீதியிலேயே செய்திகளாக வெளியிட்டு வருகின்றன. சீனாவின் ஆளுமைக் கரங்கள் ஊடகம்வரை சென்றுவிட்டமையைக் காண முடிகின்றது. உளவு நிறுவனங்கள் மூலம் இலங்கையை சீனா மென்மையாக கைப்பற்றியுள்ளது.


(தொடரும்)




CENTURY
TRAVELS GMBH
Rheinische Strasse 29
44137 Dortmund
Fon : 0231 5574 319
Fon : 0231 5896 557
Mob : 017621682149

**அன்புச் செல்வன்**

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?




இந்த வரை படத்தில் வெள்ளை நிறத்தில் காட்டப் பட்டுள்ள பிரதேசங்கள், தமிழ் மக்களின் அரசுகளில் இருந்து ஆங்கிலேயரால் பறிக்கப்பட்ட தமிழரின் தாயகம். 1833ல் சிங்கள தேசத்துடன் ஆங்கிலேயர்கள் தமது நிர்வாக வசதிக்காக இணைக்கப்பட்டு, பின்னர் காலத்துக்குக் காலம் மாகாண எல்லை மீள் வரைவு என்கிற சாட்டில் எமது நிலங்களைச் சிங்கள நிலத்துடன் இணைத்ததால், பல இலட்சம் சதுர மைல்கள் எமது தாய் மண் பறிக்கப்பட்டு, இன்றைய நிலைக்கு நாம் எங்கேயும் வாழத் தகுதி அற்றவர்களாகி விட்டோம்.

2006 -2009 முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலைகளைத் தொடர்ந்து, இலங்கை அரசு சர்வதேச அரசுகளின் கோரிக்கைகள் எதனையும் நிறைவேற்றாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் வழங்காமல், பொறுப்புக் கூறாமலும், தான்தோன்றித் தனமாக நடந்து கொள்வதைக் கண்டிக்கும் அமெரிக்காவின் 413வது காங்கிரஸ் தீர்மானம் 1948ல் தொடங்கி, தமிழ் மக்கள் படும் துயரங்களுக்கு ஒரு ஆறுதலாக நம்பிக்கை தருகிறது என்கிறார் பிரித்தானியாவில் வசிக்கும் பிரபல சட்டத்தரணியான திரு.தம்பு கனகசபை.

இதனை மீட்பது பற்றிப் பேசாமல், எமது துரோகத் தலைமைகள் மாகாண சபைத் தேர்தல் 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தீர்வு பற்றிப் பேசுவதைக் காண்கிறோம். நாடு சுதந்திரம் அடைந்த காலந் தொட்டு தமிழ் இனம் பட்ட உயிர், உடமை, உரிமை இழப்புகளைப் பற்றி எதுவிதக் கவலையும் இல்லாமல், இப்படிப்பட்ட அல்ப அரசியல் பற்றிப் பேசும் தலைமைகளைத் தமிழ் இனம் கண்டிக்காமல் விட முடியுமா?

## தமிழர் தேசத்தை மீட்போம்

இந்த வருடம், மே மாதம், 19ம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில்


உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வடமாகாண முதல் அமைச்சரும், ஓய்வு பெற்ற நீதி அரசருமான திரு.விக்கினேசுவரன் ஒரு முக்கியமான வேண்டுகோளைப் பிரித்தானிய அரசிடமும், அமெரிக்க அரசிடமும் வைத்துள்ளார். இத்தகைய வேண்டுகோளை எமது ஏக அரசுத் தலைவர்கள் எனக் கூறிக் கொள்ளும் தமிழ் அரசுக் கட்சியைத் தலைமையாகக் கொண்ட இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தக் காலத்திலும், எந்த இடத்திலும் கூறிய வரலாறே கிடையாது.

எனவே, திரு விக்கனேசுவரன் இலங்கைப் பாராளுமன்றத்தில் விடுத்துள்ள இந்த முக்கிய கோரிக்கை பற்றிய விபரங்களைத் தமிழ் மக்கள், குறிப்பாக தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரும், அவர்களின் ஆதரவாளர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இங்கே தருகிறோம்.

‘ 2013ல் அன்றைய பிரித்தானிய பழைமை வாதக் கட்சிப் பிரதம அமைச்சர் கௌரவ. டேவிட் கமறோன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்பொழுது முள்ளி வாய்க்காலில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கான நீதியும், பொறுப்புக் கூறலும் உறுதிப் படுத்தப்படும் என வாக்குறுதி வழங்கினார். ஆனால், வெளிப்படையாக எதுவும் இதுவரை நடக்க வில்லை.இப்பொழுதும் பழைமைவாதக் கட்சிதான் பெரிய பிரித்தானியாவில் அதிகாரத்தில் இருக்கிறது.



**தம்பு கனகசபை.**



**விக்கனேசுவரன்**

பிரித்தானியாவிடம் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும் பொழுது யாவை

*When Independence from Britain to Ceylon was given, the Sinhala Leaders of that time deceived the British by saying that they would look after the interests of the minorities for certain. But as soon as Independence was obtained over a million Tamils from the Upcountry were denied their citizenship. Thereafter there had been periodical discriminatory steps taken to undermine the safety and well being of the Tamil speaking in Sri Lanka.*

*Britain failed to ensure that there would be safety and fair play as far as the minorities in Ceylon were concerned. The mistake made at the time of Independence wherein adequate safeguards against the hegemony of the majority were not ensured by giving a federal constitution to Ceylon, still has its adverse effects on Sri Lanka even today.*

*But I would say that it is time now for the Conservative Government of Britain to ensure justice and fair play to our people. The mistake made during the term of office of Prime Minister Hon' Clement Atlee must now be corrected. I make this humble request on behalf of our people.*

*It is certainly heartening to see that the Democratic Party which worked hard in the UN to bring Resolutions against the Sri Lankan Government is now back in power in the US.*

*US together with Great Britain must ensure Justice and Accountability for the crimes perpetrated in Mullivaikal in May 2009.*

*Thus taking Sri Lanka before the*

*International Criminal Court stands a priority for the US and UK and other Countries who value democracy and fair play.*

*It is high time an International body of Experts on Military Law be asked to inquire into the need for the Military which committed severe human rights violations during the war, to continue to prolong their stay for the past 12 years. The Government has publicly assured that the LTTE is no more. It has assured our Country that there are no semblance of any attempts at violence of any sort in the North and East up to now. If so why should the Armed Forces continue to be in the North and East. It is not enough to say in a Democracy for security reasons without spelling out what those security reasons are.*

*We find the Military holding on to over 60000 acres of State Land and over 3000 acres of private land. We find them getting involved directly or indirectly in cultivation, fishing, trading, expropriation of our resources and so on. We find them helping those who are interested in land grabbing in the North and East coming from elsewhere. We find them aiding and abetting those who are trying to distort history. We find them trying to brainwash our people, especially the youngsters, by working on their poverty and indigent circumstances. Therefore security reasons cannot be the motive for the Military continuing to occupy our traditional homelands for twelve years after the war. We must be told the actual reasons and the reasons must be investigated by an International Panel of Military Law experts.*

அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம்

*1.The Resolutions' salient features are as follows:-*

*[1] For 12 years, Sri Lanka has failed to take any simple action on those Resolutions successfully employing the dilly dallying deceptive tactics.*

*[2] Sri Lanka has even failed to implement its own commitments, Recommendations like the LLRC of 2012 and Paranagama Commission Report on Enforced Disappearances - 2014.*

*[3] Sri Lanka has failed to initiate any local independent impartial investigation including offering reparations, thereby has buried the values of accountability and justice.*

*[4] Sri Lanka excels in doling out occasional promises meant for instant consumption, but without any good faith for compliance and implementation.*

*[5] It is high time that the hollow promises and time buying tactics of Sri Lanka are exposed for suitable actions by the UN, UNHRC and the International Community.*

*[6] The promised accountability and justice have been thrown overboard while Sri Lanka's system of entrenched impunity is boosted and nourished infusing more flesh and blood. The April 19, 2021 Resolution tabled in Parliament by Prime Minister Mahinda Rajapakshe has elevated impunity at its highest pedestal where the Security Forces and State Officials involved in the alleged commission of war crimes etc. including bribery, corruption and money laundering are out of the reach of the long arm of the law shielding any prosecution.*

*Adding insult and compounding miseries of victimized Tamils, those convicted and jailed for the massacres of innocent Tamil civilians like the TRINCO MASSACRE OF 5 STUDENTS, are pulled out of the jails to walk free, an act of insult and a blot on the judiciary and legal system.*

*[7] The US Resolution 413 has hit hard at the Government's dereliction of obligations to implement and enforce the provisions of Enforced Disappearances Act of 2011 including the Office of the Missing Persons [OMP] which are almost archives and forgotten.*

*[8] The Resolution has also slammed the Sri Lankan Government's denial of democratic rights to the people living in the North and East by postponing the Provincial Council elections, the only semblance of power sharing mechanism half-heartedly granted to the North and East under the much criticized Indo/Sri Lanka Accord of 1987.*

*[9] Sri Lanka's open challenge and defiance of UN, UNHRC and the International Community is fully exposed with its blatant breaches of several promises made to the world organizations particularly pledging to repeal the dreaded draconian Prevention of Terrorism Act of 1978.*

*[PTA]. On the contrary, PTA has now become the Government's main weapon to hunt down the media, and anyone opposing or daring to criticize the Government and its top Officials. There is no iota of doubt that the PTA will remain as the frontal armoury to advance the dictatorial agenda by intimidation and threats of violence against peaceful protesters like the threats made against the families of the disappeared who have been protesting day and night in the North and East for more than four years.*

*[10] Increased surveillance, intimidation and threats against Muslims including arbitrary arrests like the arrest of a Muslim Poet Ahnaf Jazeem.*

*[11] The 20A Amendment to the constitution has placed the President above the laws of Sri Lanka by granting full impunity from prosecutions for any civil and or any criminal acts committed by him in his official capacity as President during the term of his office.*

*Coupled with the US Resolutions is the European Union's Resolution which is calling for the*



immediate repeal of PTA and implementation of its own promises.

*There is no doubt that the President has assumed supremacy over the legislature, judiciary and executive aided by his family members who are holding several Ministerial and sub Ministerial positions controlling about 16 Ministries and Departments. Undoubtedly Sri Lanka's fate of the mangled democracy's survival hangs at the whims and fancies of Rajapaksa and it appears there is little hope it will emerge unscathed during Rajapaksas' reign unless and until UN and International community take the necessary punitive measures against Sri Lanka without delay.*

*The gleaming feature of the US Resolution 413 is the recognition of North and East as traditional homeland of the Tamils implying their inhabitation in the North and East for more than 2000 years and as a Nation. Better late than never, it is a historical recognition of the Tamil Nation in the North and East which is entitled to exercise full rights and powers over those living in the North and East subject to Central Government's control over defence, exercise, customs, postal service and immigration. In summary, Sri Lanka has abysmally failed to respect its undertakings and international obligations, paid scant respect to recognize the roles of UN and UNHRC thereby becoming an outcast.*

*In the face of these breaches, lapses and failings displayed by Sri Lankan Government, The Tamils hope that the UN and the International Community will rally together to back this important US Resolution 413 and make it a successful one, by also cooperating with US to initiate and enforce the required measures to force Sri Lanka to comply with the wills and recommendations of UN, UNHRC and the International Community commencing with the honoring and implementing the UNHRC Resolutions Nos. 30/1, 34/1, 37/1, 40/1 and 46/1.*




HANDY WELT
TRAVEL WITH OUR PHONE
Handy Reparatur
Handy Aufladen
Handyvertag
Günstige Sim Karten
Handy-Zubehör
Geld senden
Günstige gebrauchte & neue Handys
வீட்டு மின்சாரக் கட்டணத்தை
கட்டுப்படுத்த வேண்டுமா?
கவலையை விடுங்க!
0231 எங்களை அழையுங்க!
961 26 555
SCAN MICH
1&1
ay yıldız
yourfone
FÜR DICH. FÜR SIE. FÜR ALLE.
O2
Blau
stromschalten.de
WESTERN UNION WU
Ria MONEY TRANSFER
Mallinckrodt Str. 70 • 44145 • Dortmund
01630 33 32 33
0231 981 89 888
handyweltdo20@gmail.com




தேவன்

## மேதகு

# விடுதலைப்புலிகளின் வரலாறு தழுவி வெளிவந்திருக்கும் படைப்பு



மேதகு என்ற திரைப்படம் வெளிவந்து பல நேர் மற்றும் எதிர்விமர்சனங்களைச் சந்தித்திருக்கிறது. தரவுப் பிழைகளுடன் வெளிவந்திருப்பினும், மேதகு பேசும் அரசியல் நேர்த்தியானது, உண்மையானது. காலத்திற்குத் தேவையான படைப்பாக மேதகு வெளிவந்திருக்கிறது. தரவுப்பிழைகளை நேர்செய்திருப்பின் இதனை ஈழத்தமிழர் வரலாற்றுப் படைப்பாகக் கொண்டாடியிருக்க முடியும்.

வரலாற்றுச் சம்பவங்களைச் சீராக அறியாத ஈழத்தமிழர்கள் சிலர் தொகுத்தத் தரவுப்பிழைகளால் மேதகு திரைப்படம், “வரலாற்று ஆவணம்” என்ற நிலையை எட்டாமற் போயிருப்பது மிகுந்த வேதனைக்குரியது. ஆனாலும், இயக்குனர் கிட்டு உலகத்தமிழர்களால் கொண்டாடப்பட வேண்டியவர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அவர் இத்திரைப்படத்திற்காக எடுத்துக் கொண்ட சிரத்தையும், எதிர்கொண்ட குறுக்கீடுகளும், தடங்கல்களும் இலகுவானவை அல்ல. மேதகு திரைப்படத்தை “வரலாற்றைத் தழுவி எடுக்கப்பட்ட திரைப்படம்” எனச் சொல்வதே பொருத்தமானது என்கிறார் சினம்கொள் திரைப்படத்தை இயக்கிய ஈழத்தமிழ் இயக்குநர் இரஞ்சித் யோசேப் அவர்கள்.





தரவுப்பிழைகளை நாம் சுட்டிக்காட்டுவது, வரலாற்றுப்போக்கில் மிக அவசியமானது. அதுவே இனி வெளிவரப்போகும் தமிழ்த்தேசியம் சார்ந்த படைப்புகளுக்கான சிறந்த வழிகாட்டியாக இருக்கமுடியும். தவறுகள் சுட்டிக்காட்டப்படாத விடத்து, அதுவே உண்மையானதாக மாறிவிட வாய்ப்புண்டு.

தரவுப்பிழைகள் தொடர்பில் இயக்குனர் கிட்டு மீது குற்றம் சுமத்துவதோ, அல்லது மேதகு திரைப்படத்தின் தமிழகத் தயாரிப்பாளர்கள் மீது குற்றம் சுமத்துவதோ எள்ளளவும் பொருத்தமற்றது. சில வரலாற்றுத் தகவல்களை நேர்த்தியாகத் தொகுக்காமல், பிறழ்வுகளோடு தரவுகளை வழங்கிய, ஈழத்தமிழர்கள் சிலரே இதற்கான முழுப் பொறுப்பினையும் ஏற்கவேண்டும்.

இடம்பெற்ற தரவுப்பிழைகளை இரண்டாக வகுக்கமுடியும். முதலாவது; நிதிவளம் மற்றும் ஆளணி வளத்தின் இடையூறுகளால் முழுமையாகக் காட்சிப்படுத்த இயலாது போன வரலாற்று நிகழ்வுகள், இரண்டாவது வரலாற்றுப்போக்கில் பிறழ்வுகளை உண்டாக்கக்கூடிய காட்சிப்பதிவுகள்.

இவற்றில் முதலாவது வகையைத் தீர்மானிப்பது காட்சிப்படுத்தப்படும் தளத்தின் சூழ்நிலைகளே. ஆதலால் அவை இப்படித்தான் இருக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தவியலாது. ஆனால்; இரண்டாவது வகையில் சமரசங்கள் இருக்கவியலாது. அது வரலாற்று முரணை உருவாக்கி, எதிர்காலத்தில் இது வரலாறா? அல்லது கட்டுக்கதையா? என்ற அபாயக் கோட்டைஎட்டிவிடக்கூடும்.

பொன்.சிவகுமாரன் காவல்துறையால் சுற்றிவளைக்கப்பட்டுச் சுடப்படும் காட்சியில், சிவகுமாரன் காவல்துறையால் நேரடியாகச் சுட்டு வீழ்த்தப்படுவது போன்று காண்பிக்கப் பட்டுள்ளது. உண்மை யாதெனில்; சிவகுமாரன் தனது காயமுற்ற நிலையில், எதிரில் நிற்கும் காவல்துறை உத்தியோகத்தரைச் சுட எத்தனிக்கையில், தமக்குப் பிள்ளைகள் இருப்பதாகவும், தம்மை விட்டுவிடும் படியும் அவர் மன்றாட, அவரைத் தப்பிச் செல்லுமாறு கேட்கிறார் சிவகுமாரன்.

இந்த வரலாற்று ஈகம் முறைப்படி பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். இதற்கு மேலதிக நிதிவளம், அல்லது ஆளணி வளம் போதவில்லையெனச் சொல்வது பொருத்தமற்றது.

கதையில் மதிவாணன் என்ற புதிய பெயர் நுழைக்கப்படுகிறது. அப்படியொருவர் ஆரம்பகாலத்தில் இருந்ததாக எங்குமே பதிவுகள் இல்லை. அவர் ஏன் இக்கதையுள் வந்தார் என்பது பலருக்கான கேள்வி. அவ்விடத்தில் வரவேண்டிய வேறொரு நபரின் பெயரை




மாற்றி, மதிவாணன் என்ற கதாபாத்திரம் நுழைக்கப்பட்டுள்ளது. எல்லாக் கதாபாத்திரங்களும் இயற்கையாக அதே பெயருடன் இருக்கையில், வரலாற்றில் இல்லாத ஓர் பெயரான மதிவாணன் நுழைக்கப்பட்டது ஏற்றுக் கொள்ளவியலாத வரலாற்று முரண்.

துரையப்பாவைச் சுட்டுவீழ்த்தும் காட்சியில், கலாபதியின் பாத்திரம் காட்டப்படவில்லை. துரையப்பா மீது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்கள் தலைவர் பிரபாகரன், மற்றும் திரு. கலாபதி ஆகிய இருவருமே!. ஆனால், தலைவர் பிரபாகரனது துப்பாக்கிச் சுடப்பட்ட பின்னரே துரையப்பா நிலத்தில் வீழ்கிறார். இது முறையாகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் திரு.கலாபதி அவர்கள் இன்னமும் வாழும் சாட்சியாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**TNT (Tamil New Tigers)** பெயரின் தமிழ்ப்பதமான “புதிய தமிழ்ப் புலிகள்” என்ற பெயருடனேயே விடுதலைப் புலிகள் ஆரம்பநாட்களில் செயற்பட்டார்கள். இப்பெயரை முதலில் முன்மொழிந்தவர் மாமனிதர் திரு.இராசரத்தினம் ஆவார். தலைவரின் மதிப்பிற்குரிய தங்கண்ணா என்பவரே இதைத் தலைவர் பிரபாகரனிடம் தெரிவிக்கிறார். வுழிவு என்ற பெயரில் வெடிபொருளும் இருப்பதை எழுச்சியாக உணர்ந்து, அதையே ஏற்றுக்கொள்கிறார் தலைவர்.

ஆனால், மேதகுவின் காட்சியில் “தமிழ்ப் புதிய புலிகள்” என எழுதிக் காண்பிக்கிறார்கள். இப்பெயர் முறையாகக் காட்சிப்படுத்தப்படுவதே வரலாற்றுக்குத் துணை செய்யும். இல்லையேல் எதிர்காலத்தில் இப்பெயரிலேயே குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு.

இவையெல்லாவற்றையும் விட, மேற்குறிப்பிட்டவையோடு ஒப்பிடுகையில் சாதாரணமானது தோன்றக்கூடிய தரவுப்பிழைகள் ஏராளமாக உண்டு. ஆதலால் தான் இத்திரைப்படத்தை விடுதலைப் புலிகளின் ஆரம்ப வரலாற்றைத் தழுவி எடுக்கப்பட்ட திரைப்படமாகக் கொள்வதே ஏற்புடையது எனப் பலரும் கருத்துரைக்கிறார்கள்.


வரலாற்றாய்வாளர் ஒரிசா பாலு அவர்களது கருத்தும் இதுவேதான். ஆனால்; தரவுப்பிழைகளோடு கதையினைத் தொகுத்து, எவரிடமும் ஆலோசிக்காமலேயே கதையைக் காட்சிப்படுத்தத் துணை நின்ற ஈழத்தமிழர்கள் சிலர் இந்தத் தரவுப் பிழைகளை ஏற்க அணியமாக இல்லை என்பது மிகுந்த வேதனைக்குரியது.

இவற்றை உள்மனதில் பதிவுசெய்தபடி, மேதகு திரைப்படத்தை அனைவரும் கட்டணம் செலுத்திக் காண வேண்டுமென ஈழத்தமிழர்கள் அனைவரையும் அகரம் பணிவோடு வேண்டிநிற்கிறது.

# L-mobi mobile

top up | prices | My L-mobile | International

| Bundle | Contents | Price | Terms |
|---|---|---|---|
| 100MB | 50MB + 50MB Gratis | €1 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 256MB | 128MB + 128MB Gratis | €2 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 512MB | 256MB + 256MB Gratis | €3 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 1GB | 512MB + 512MB Gratis | €4 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 2GB | 1GB + 1GB Gratis | €5 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 3GB | 1.5GB + 1.5GB Gratis | €6 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 4GB | 2GB + 2GB Gratis | €6,50 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 5GB | 2.5GB + 2.5GB Gratis | €7 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 6GB | 3GB + 3GB Gratis | €7,50 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 7GB | 3.5GB + 3.5GB Gratis | €8 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 8GB | 4GB + 4GB Gratis | €8,50 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 10GB | 5GB + 5GB Gratis | €9 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 12GB | 6GB + 6GB Gratis | €11 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |
| 15GB | 7.5GB + 7.5GB Gratis | €13 | Maandelijks opzegbaar · Geen aansluitkosten · Geen BKR controle |




Action! get 2= pay 1
With an annual bundle
worth 24.95
Get the 2nd SIM card for

**FREE!**

## A whole year for a fixed price!

**Reliable, affordable, accessible. For everyone.**



+31 20 363 62 31
cs@l-mobi.nl

Website : www.l-mobimobile.nl

Amstel Business Park Entrada 204,
1114 AA Amsterdam

*Available at*

JUMBO · coop · AKO · recharge.com · SENIORSTORE.NL · bp · OPWAARDEREN.NL · BELTEGOED.NL · Phone House · Primera · tele combinatie · BCC · OPTIE 1 Smart Living · SPAR · MCD mijn supermarkt

மனோ

# இலங்கை அரசியலில் வெளிநாடுகளின் தலையீடு


இலங்கை அரசியலில் வெளி நாடுகளின் தலையீடு முன் எப்பொழுதையும் விட இப்பொழுது மிக அதிகமாக உள்ளது. இந்தியா இலங்கையின் சீன உறவும் அதன் அத்துமீறி வரும் செல்வாக்கு தொடர்பான பாதுகாப்பு அச்சுறுத்தலை கடுமையாகப் பார்க்க வேண்டிய நிலையில் இருப்பதை காண முடிகிறது. இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலிய, யப்பான் நாடுகளின் நால்வர் அமைப்பு சீனாவை எதிர் கொள்ளும் நிலை தோன்றி விட்டதாக அரசியல் விமர்சகர்களின் கருத்துகள் காட்டுகின்றன.

இத்தகைய பின்னணியில் இரா.சம்பந்தன், சுமந்திரன், மாவை செல்வம், அடைக்கலநாதன் ஆகியோர் அடங்கிய குழு அமெரிக்க தூதுவரைக் கொழும்பில் சந்தித்துப் பேசியதாக செய்தி வெளியாகி உள்ளது. வழமையாக சம்பந்தன், சுமந்திரன் மட்டுமே இப்படியான சந்திப்புகளை நடத்தி விட்டு, எந்த விதமான செய்தியையும் வெளியிடாமல் இருந்து விடுவார்கள். இப்போது குழுவாகச் சென்று நடத்திய பேச்சு என்ன பேரம்? என்பது எட்டு நாள் போனால் தெரியும் . அப்பத்தானே கெட்டிக்காரன் புளுகு வெளியே தெரிய வரும்.

பாசில் ராஜபக்ஷவை அமெரிக்கா அதற்காகவே அனுப்பி வைத்து, அவர் திடீர் பாராளுமன்ற உறுப்பினராக்கப் பட்டு, நிதி அமைச்சராகவும் ஆக்கப்பட்டதை அமெரிக்கா மீண்டும் ஒரு ஆட்சி மாற்றத்தை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகச் சில விமர்சனங்கள் உலா வருகின்றன.

மகிந்த ராஜபக்ச நிதி அமைச்சர் பதவி பறிக்கப்பட்டு, பிரதமராக மட்டுமே என்கிற நிலையால் அவரது அதிகாரம் முக்கியம் குறைந்தவராக ஆக்கப்பட்டுள்ளார். அடுத்த ஜனாதிபதிக் கனவில் வளர்க்கப்பட்ட நாமல் ராஜபக்ஷ சித்தப்பா பசிலுக்கு இடம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகி விட்டதையும் இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன.

இவற்றைப் பார்க்கும் பொழுது



ஜெனிவாவில் தமிழர் தரப்பு நியாயங்கள் மீண்டும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுமோ என்கிற அச்சம் எழுகிறது. ஏனென்றால், எமக்கான அரசியல் தலைமை தானாகவும் எதுவும் செய்யாது, தள்ளியும் போகாமல் நந்தி போலத் தடுக்கவே பிறந்து வந்த அவதாரங்கள். நல்லது ஏதும் தமிழ் மக்களுக்கு நடக்க வேண்டும் என்றால், அது பிரித்தானியா, கனடா ஐரோப்பிய நாடுகளின் தயவால்தான் நடக்க முடியும்.

இப்பொழுது இந்தியா ஈழத் தமிழருக்காக என்னமோ செய்யப் போகிறது என்கிற தோற்றப்பாட்டை பல தமிழ் யு.ரியுப் ஊடகங்கள் பரப்பிக் கொண்டு வருகின்றன. ஆனால், இந்திய பெரிய பொது ஊடகங்களோ, அரச தரப்பு செய்திகளோ இது தொடர்பான எந்தச் செய்தகளையும் பேசாத நிலையில், புலம் பெயர் ஈழத் தமிழ் மக்கள் மிக அவதானமாகவும், எச்சரிக்கையுடனும் ஜெனிவாவில் தமது நடவடிக்கைகளில் எந்தவிதத் தொய்வும் ஏற்படாதபடி முன்னகர்த்திச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் ஈழத் தமிழ் மக்களுக்கான உண்மை விடியல் கிடைக்கும்.

## நந்திக் கடலில் நாம் இழந்த உறவுகள்

எங்கள் தலைவர்களை நம்பினோம். அவர்கள் காட்டிக் கொடுத்தே 2009 தமிழ் இன அழிப்புக்குத் துணை நின்றார்கள். அன்று தொடக்கம், மாறி மாறி சிங்கள அரசுத் தலைவர்களின் காலடியில் தவம் கிடந்து இந்திய அரசின் அரசியலை செய்தார்கள். இன்னமும் அவர்களில் எந்தவித மாற்றமும் இல்லை. இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் படி எந்த ஒரு சட்டத் திருத்தத்தையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றிச் சிங்கள மக்களின் கருத்தெடுப்பில் பெரும்பான்மை ஆதரவு பெற்றால் மட்டுமே அது சட்ட வடிவம் பெற்று, செயல் வடிவம் காணமுடியும். இப்படி ஒரு அதிசயம் இன்றைய இலங்கையில் கனவில் கூடச் சாத்தியப்படுமா? எனச் சிந்திக்கத் தவறினால் எம் இனத்தை கடவுளாலும் காப்பாற்ற






சொல்லிச் சென்றதை நாம் மறந்தவர்களாகவே இருந்து விடுவோம்.

இந்திய அரசியலை கவனிக்கும் எவரும் அது தமிழர் தொடர்பாக எந்த வித கரிசனையும், கவலையும் கொள்ளாத நாடாகவே இன்னமும் நடந்து கொள்கிறது. புலிகள் மீதான தடையை நீக்கும் உத்தேசம் அதனிடம் கிஞ்சித்தும் கிடையாது. ராஜீவ் காந்தி கொலையைப் புலிகள்தான் செய்தார்கள் என்பதை உலகுக்குக் காட்டுவதையே அதன் பிரதானமான நோக்கமாக உள்ளது. அதற்காகவே இன்று வரை அது நியமித்த பல்நோக்கு விசாரணை ஆணையத்தின் விசாரணையை 20 வருடங்களுக்கு மேலாக முடக்கி வைத்திருக்கிறது. அநியாயமாக 7 அப்பாவித் தமிழர்களை 25 வருடங்களுக்கும் மேலாக சிறையில் வைத்துக் கொடுமைப் படுத்துகிறது. இப்படி நடந்து கொள்ளும் இந்திய அரசா ஈழத் தமிழ் மக்களுக்கு விடியலைத் தேடித் தரும் எனச் சொல்லுவார். சொன்னாலும் நம்புகிறவர்களுக்கு ஒரு மதி இருக்க வேண்டாமா?

இந்திய அரசுக்கு இலங்கையில் சீனா வந்து விட்டதே என்கிற கவலை பெரிதல்ல!. தனது கூட்டாளி அதானிக்கு கொழும்புத் துறைமுக கிழக்குப் பெட்டக முனையை இலங்கை தரவில்லையே என்கிற கோபம். திரிகோண மலையில் தனக்கான தேவைகள் மறுக்கப்பட்டு சீனா பல ஒப்பந்தங்களைப் பெற்று விட்டதே என்கிற தாபம். கிழக்கில் இப்படி என்றால், வடக்கிலும் அனலை தீவு, மண்டை தீவு, நெடுந்தீவுகளில் சூரிய ஒளி மின்நிலையங்களை அமைக்க சீனா ஒப்பந்தமாகி விட்டதே என்கிற எரிச்சல். எம் இனத்தை அழித்து எரித்த இவர்களுக்கிடையே உள்ளது கொள்ளை அடிப்பதில் உருவான சொத்துப் பங்கீட்டுப் பிரச்சினை.

நூறாண்டுகளாகத் தமிழர்களை ஏமாற்றி அழித்த சிங்களம் செய்து காட்டிய வித்தையை இப்பொழுது இந்தியா கடந்த 40 வருடங்களாக எங்களிடம் செய்து காட்ட முற்படுகிறது. எனவே, எந்தக் கொம்பன் சொன்னாலும் நாம் இந்தியாவை நம்பி அதன் பின்னே இனி ஒரு தரமேனும் செல்ல முடியாது, செல்லவும் கூடாது.





BOX
கோடைகால விலைக்கழிவு
€149
€109
24X7 SALES & SUPPORT
மேதகு
12 MONTHS
3 மாதம் இலவசம்
AMAZON STICK FREE
Malayalam
30+ CHANNELS
Telugu
30+ CHANNELS
Hindi
40+ CHANNELS
Punjabi
30+ CHANNELS
REACH OUR DISTRIBUTORS
OFFICE :
0044 2037 690498
UK :
0044 7882274040
0044 7723229209
SWISS :
0041 4455 14321
NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :
0031 621604168
FRANCE :
0033 782775490
0033 977195911
GERMANY :
0049 17670334213,
0049 62063052893
ITALY :
0039 3510257812
DENMARK :
0045 20829548
0045 20718780


TKS
BEST FOODS
HOT SUMMER SALE
Jul 2021
Laila
Premium Quality Finest Old & Mature
Basmati Rice
20kg
TRS
RED SPLIT LENTILS
MUNG DAL
AGAM APPALAM
உங்களின் அன்றாட தேவைகளுக்கும்
உங்களின் வேண்டுகோளுக்குமிணங்க
தரம் என்ற தாரக மந்திரத்துடன்
நியாயமான விலைகளுடன்
பலசரக்குப்பொருட்கள் மரக்கறி வகைகள் மற்றும்
மீன் வகைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
SCAN ME
Rheinische Str. 79 • 44137 • Dortmund
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de
0049 231 950 468 83
tksbestfoods